அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 14 | ஜூலை 2022 | திருவள்ளுவர் ஆண்டு 2053









ஜூலை கலவரம் அன்றும் இன்றும்...



## யாருக்கு வெற்றி?

## பொழுது விடியாதா?

## Southern Brother!

## குருந்தனூர் மலை



சு.ஜனா

# அற்புத அகிலம்!!

ஆகா! ஆகா! -இது
அதிசய அகிலமல்லவா?
மாசற்ற மானிடத்தின்
சங்கம உற்சவமல்லவா?
என்றுமில்லாத எழில் நிரம்பிய
வண்ணக் காலமல்லவா?

அன்பு பொங்கும் உள்ளங்களின்
ஒன்றித்த பயணம்
அச்சமில்லை துச்சமில்லை
யாருக்கும் யாரும்
குறைச்சலில்லை!!

பச்சைமரக் குழைகளை
ஆடையாக்கி,
அங்கத்தில் பதித்தபடி
பழமரக் காட்டிற்குள்
பவனி வருகிறோம்!
பட்டாம் பூச்சிகளைப்
பார்த்து, பலவித்தை
பயில்கின்றோம்.
எட்டா மரக்கிளையை
எட்டிப் பிடிக்க முயல்கின்றோம்!!

பாகுபாடு கொஞ்சமுமில்லை
பாசத்திற்குப் பஞ்சமுமில்லை
பழகுவதும் சுலபமாகி
தோழமை ஊஞ்சலாடுகிறது

காயப்படுத்தாத நேயர்களின்
ஒருமிப்பு ஓங்குகிறது!!

எதற்காகப் பிறப்பெடுத்தோம்?
கேள்வி வருகிறது
வாழத்தான்
வந்திருக்கிறோம் - வாழ்க்கையை
வாழத்தான் வந்திருக்கிறோம்.
ஒன்றாகப் பதில் உரைத்தோம்.
நாமெல்லாம் யார்?
மறுகேள்வி வருகிறது.
சொந்தங்கள் தான் சாமி
சொந்தங்கள் தான்.
சேர்ந்து குரல் கொடுத்தோம்.

மகிழ்ந்திருங்கள்
மகிழ்ச்சிக் கடலில்
குளித்திருங்கள்
அந்தக் குரல் சொன்னது
ஆணுமில்லா பெண்ணுமில்லா
ஒரு குரல் அது
இரண்டும் கலந்திருக்கும்

அருவுருவம்!
அதில் ஒரு அர்த்தமுண்டு
ஆணும் பெண்ணும் சமமே!!

அற்புத தேசம்!
அழகிய தேசம்!
ஆனந்த தேசம்!
அடிமைப் படுத்தாத தேசம்!!

அட.. இது
கண்ணயரக் கண்ட கனவா? இல்லை
கண்மூடி மனம் விழித்திருக்க
முளைத்த கற்பனையா?
இந்த அற்புத தேசத்தினுள்
பிரவேசிக்கும் பாக்கியம்
மறுபடி கிடைக்குமா?
நிஜத்திலும்
இப்படியொரு உன்னத உலகம்
காணவேண்டும்.
பல வினாக்களுக்கு
விடை
யாரறிவார்?

மாத இதழ் | மணம்: 14
ஜுலை
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


- ஆசிரியர் கருத்து... 05
- யாருக்கு வெற்றி?... 06
- குருந்தனூர் மலை... 11
- சிறப்புக் குழந்தைகள் 15
- மலையகத்தின் பெண்மணிகள்.... 17
- தேசத்தின் தூண்கள் (கவிதை)... 19
- ஆவி உலகிலிருந்து (கவிதை( .... 20
- பொதுப் போக்குவரத்துகளில்... 21
- இதுவும் ஒரு கோடை (கவிதை)... 24
- பொழுது விடியாதா?... 25
- வங்கம் தந்த பாடம்.... 29
- சிங்கள இசை நிகழ்ச்சியில்... 32
- Southern Brother!.. 35




## திருக்குறள்

**குறள் 634:**

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு"

**விளக்க உரை:**

ஒரு செயலைத் தேர்ந்தெடுத்தாலும், அதனை நிறைவேற்றிட வழிவகைகளை ஆராய்ந்து ஈடுபடுதலும், முடிவு எதுவாயினும் அதனை உறுதிபடச் சொல்லும் ஆற்றல் படைத்திருத்தலும் ஒரு சிறந்த தலைவனுக்குரிய பண்பாகும்.












இம்முறை புத்தகத்தைப் பார்த்ததும் இரட்டிப்புச் சந்தோஷம். எங்கள் வேண்டுகோளை ஏற்று ஆங்கிலத்திலும் சில ஆக்கங்கள் வந்திருப்பது இரட்டிப்பு சிறப்பு. எங்கள் வீட்டு பிள்ளைகளே ஆர்வமாக வாசித்தது மன நிறைவாக இருந்தது. இப்படி இடைக்கிடையாவது ஆங்கிலத்திலும் போட்டால், பின்னாளில் பிள்ளைகள் பொறுப்பெடுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை வருகிறது. அத்தனை ஆக்கங்களும் வடிவமைப்பும் அருமை.

**பார்த்திபேந்திரன் (ஒன்ராறியோ)**

இலங்கையில் என்ன நடக்கிறது என்றே சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவரவர் தமக்குத் தோன்றியதை எல்லாம் எழுதுகிறார்கள்.

எழுநிலம் சரியான தகவல்களை பொருத்தமான நேரத்தில் தருகிறது. மிகவும் மகிழ்ச்சி. கட்டுரைகள் தெளிவான பார்வையில் எழுதப்படுகிறது. மிகவும் சிரமமான பணிதான். தொடரட்டும் உங்கள் பணி. அட்டைப்படம் இலங்கை நிலவரத்தை எடுத்துச் சொல்வதாக தெரிந்தெடுத்திருப்பது சூப்பர்.

**சுந்தரமூர்த்தி (பாரிஸ்)**




பொழுதைக் கழிக்க கதை வாசிக்கத் தொடங்கி, இப்போது அதன் கதையம்சத்துடன் ஒன்றிவிட்டேன்.

எழுநிலம் கதைகளுக்காகவே காத்திருக்கத் தொடங்கி விட்டேன். இம்முறை ‘ஊர் உலா’ வாசிக்க வாசிக்க அத்தனை ரசனையாக இருந்தது.

ஒரு குட்டிக் கதையினுள், நாங்கள் எப்படி வாழ வேண்டும் என்ற கருத்து ஆணித்தரமாக இருப்பதுடன் யாழ்ப்பாண அருகிப்போகும் பேச்சு வழக்கு, வெளிநாட்டு வாழ் வயோதிபரின் ஏக்கம் அப்பட்டமாக இருக்கிறது. அட்டா அருமை. அருமை.

பேசாமல் சிறுகதைத் தொகுப்புகளையும் வெளியிடலாமே?

**பரமேஸ்வரி கணநாதன் (மொறிசியஸ்)**

ஒரு வேண்டுகோள் ஆசிரியர் பக்கம் மிக முக்கியமானது. எடுத்தவுடன் அதைத்தான் முதலில் வாசிப்பார்கள். கறுப்பு பின்னணியில் வெள்ளை எழுத்துக்களில் வந்திருப்பது வாசிப்பதற்கு சிரமமாக இருக்கிறது. இதைக் கருத்தில் எடுத்தால் என்னைப் போன்றவர்கள் சந்தோசமாக வாசிப்பார்கள். இம்முறை கவிதைகள் நன்று. புதிய எழுத்தாளர்களை, குறிப்பாக பெண் எழுத்தாளர்களை ஊக்குவியுங்கள். இன்னும் சிறப்பாக வளர ஆசிகள்.

**சந்தியா சபேசன் (இத்தாலி)**

வாவ். எழுநிலம் அடுத்த கட்டத்திற்கு போயிருக்கிறது. வருங்காலத்தில் வேறு வேறு மொழிகளிலும் எழுநிலம் வெளிவர வேண்டும்.

வழமை போல புத்தகம் அருமை. ஆக்கங்கள் இன்னும் நிறையப் போடலாம். புத்தகத்தை அச்சிட்டு வெளியிடலாம். மாதம் இருமுறை வெளியிடலாம். இவைகள் எனக்குக் குறைகளாகத் தெரிந்தாலும், இந்த விமர்சனம் உங்கள் வளர்ச்சிக்கு உதவக் கூடும்.

கடுமையான உழைப்புத் தெரிகிறது. உயரப் பறக்க வாழ்த்துகள்.

**வாசுகி இராஜகாரியர் (தென்னாபிரிக்கா)**

புத்தகம் மிகவும் சிறப்பாக வடிவமைக்கப் பட்டிருக்கிறது. ஒரு புத்தகத்தின் வடிவமைப்புத்தான் அதை வாசிக்கத் தூண்டும் என்பது என்னுடைய நம்பிக்கை. வாழ்த்துகள். ஆக்கங்கள் எல்லாமே அருமை. யாழ் நூலக எரிப்பு பற்றிய கட்டுரையை வாசிக்க வாசிக்க மனம் கொதித்துப் போகிறது. எப்படியெல்லாம் எங்களை அழிக்கப் பார்க்கிறார்கள்? வாசிப்பு அருகிப் போய்க் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் உங்கள் புத்தகம் தொடர்ந்து வரவேண்டும், வாசிப்பைத் தூண்ட வேண்டும் என்பது எங்களுடைய அவா.

**சிவபாதசுந்தரம் குடும்பத்தினர், (மெல்போர்ண்)**

‘விமர்சனத்தால் வீழ்வாயா பெண்ணே’ கவிதை கருத்தாழமாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. இந்தக் கவிஞரின் எழுத்தில் ஒரு சேதி இருக்கிறது. எழுத்தை மேலும் மெருகுபடுத்தலாம். ‘சிந்திக்க’ ஒரு அருமையான சிந்தனை. எல்லோரும் இதை வாசிக்க வேண்டும். புத்தகம் மிக நன்றாக இருக்கிறது. மேலும் வளர வாழ்த்துகள்.

**ரேவதி ஜெகஜீவன், (லண்டன்)**




ஒவ்வொரு நாளும் இணையத்தளத்தைப் பார்ப்பது எனது வழக்கம்.

பரவாயில்லையே!. ஒவ்வொரு நாளும் நிறையப் பேர் இணையத்தில் தேடுகிறார்கள். ஆனால், எத்தனைபேர் என்னைப் போல புத்தகத்தை எடுத்து வாசிக்க சிரமப்படுகிறார்களோ தெரியவில்லை.

சிலசமயம் கடினமாக இருக்கிறது. இது ஒன்றுதான் எனது குறை. ஆக்கங்கள் அனைத்தும் வாசிக்கத் தூண்டுபவையாக இருக்கின்றன.

**அருந்தவராணி மயில்வாகனம் (தாயகம்)**

# இரத்தக் களரியாகுமா இலங்கைத்தீவு?

## ஆசிரியர் பக்கம்

ஆயுதங்கள் எதுவுமின்றி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் நித்திரையில் இருந்தபோது, நடுநிசியில், ஒரு வன்முறை அரங்கேறி இருக்கிறது. புதிய சனாதிபதி தனக்குக் கிடைத்திருக்கும் அளவில்லா அதிகாரங்களை அப்பாவி மக்கள் மீது பிரயோகித்து, தனது பதவிச் செருக்கைக் காட்டத் தொடங்கி விட்டார்.

என்ன நடந்தது?

சனாதிபதி மாளிகையின் ஒருபகுதியில் ஆர்ப்பாட்டக்காரர்களால் நிர்வகிக்கப்படும் நூலகம் இயங்குவதும், அதே கட்டடத்தின் மறுபகுதியில் பொலிஸார் நிலை கொண்டுள்ளதும் தெரிந்ததே. 22/07/2022 அன்றைய தினத்தில் சனாதிபதி மாளிகையை முற்றாக அரசிடம் ஒப்படைப்பது என்றும், அரசை நடத்த ரணிலுக்கு மூன்று மாதகாலம் அவகாசம் கொடுத்துப் பார்க்கலாம் என்றும் முடிவெடுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள், 21/07/2022 அன்றே வெளியேற்றத்திற்குரிய நடவடிக்கைகளிலும் இறங்கியிருந்தனர். ரணில் பதவிக்கு வந்தவுடன், பண்டாரநாயக்க சிலையைச் சூழ 50 மீற்றர் சுற்றுவட்டாரத்தினுள் எந்த ஆர்ப்பாட்டமும் நடைபெறக் கூடாது என்ற கொழும்பு கோட்டை நீதிமன்ற உத்தரவுக்கு இணங்க, அன்றே செஞ்சிலுவைச் சங்கக் கூடாரம்கூட அகற்றப்பட்டு விட்டது. போராட்டக்காரர்களின் கோசங்கள் கூட அமைதியாகிவிட, பிசுபிசுத்துப் போகுமா போராட்டம் என்ற ஐயம் எழுந்தது என்னவோ உண்மைதான்.

அரச கட்டடங்களைக் கைப்பற்றியோர் மீது நடவடிக்கை, போராட்டத்தில் மும்முரமாக நின்றவர்கள் மீது விசாரணைகள், கைதுகள், முந்தைய வருட போராட்டம் ஒன்றைக் காரணம் காட்டி பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியத் தலைவர் கைது என்று பதவி கிடைக்கும்வரை அமைதியாக இருந்த ரணில் அதிரடி காட்டியபோதே, நிலைமை மாறப் போவதில்லை என்பது ஊகித்ததுதான். 22/07/2022 நள்ளிரவில், அத்தனை பொலிசாரும் திடீரென்று காணாமற்போக, 5000 இற்கும் அதிகமான விசேட அதிரடிப் படையினரால் ‘கோத்தா கோ கம’, ‘ரணில் கோ கம’ என்று ‘அரகாலியா’வின் அத்தனை இடங்களும் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டு, கூடாரங்கள் சிதைக்கப் பட்டிருக்கின்றன. போராட்டக்காரர்கள், பத்திரிகை நிருபர்கள், சட்டத்தரணிகள், கூடாரங்களில் படுத்திருந்த குழந்தைகள், முதியவர், காது கேளாதவர், வாய் பேச முடியாதவர் என்ற எந்த வேறுபாடும் இன்றி தாக்கப்பட்டிருக்கின்றனர். கடுமையான காயங்களுக்கு உள்ளான பலரால் அதிரடிப் படையினரைக் கடந்து வைத்தியசாலைக்குச் செல்ல முடியவில்லை. விடிந்ததும், குவிக்கப்பட்டிருந்த விசேட அதிரடிப் படையினருடன் பொலிசாரும் இணைந்து அந்தப் பிரதேசம் இப்போது கொதிநிலையில் உள்ளது. போராட்டத்திற்கு ஆதரவாக மீண்டும் மக்கள் கூடத் தொடங்கிவிட்டார்கள், ரணிலின் மீதான வெறுப்பை அவர்கள் வெளிப்படுத்த, மீண்டும் ஆர்ப்பாட்டம் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. இவ்வளவுக்கும் சூத்திரதாரியான ரணில் அவர்கள் புதிய பிரதமரான திரு தினேஸ் குணவர்த்தனவின் பதவிப் பிரமாண விழாவில் இருக்கிறார்.

யார் இந்த ரணில் விக்கிரமசிங்க? மக்கள் தெரிவின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகக்கூட உள்நுழைய முடியாதவாறு மக்களால் தூக்கியெறியப்பட்ட ஒருவர். தேசியப் பட்டியல் மூலம் பின்வாசல் வழியாக நாடாளுமன்றம் சென்ற ஒரேயொரு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர். ஐந்துமுறைகள் தட்டுத்தடுமாறி பிரதமராகியும் நிலைக்க முடியாது மண் கவ்வியவர். ராஜபக்ச குடும்பத்தின் எடுபிடி. ராஜபக்சக்களையும் அவர்களின் சொத்துக்களையும் காக்கும் ‘டீல்’ உடன், அவர்கள் கட்சி வாக்குகளுடன் அரியணை ஏறியவர். ரணிலின் பின்னால் மேற்குலகின் பெருந்தலைகள் இருப்பது வெளிப்படையான ரகசியம். பூச்சியத்திலிருந்து, கோலோச்சும் நிலைக்கு ரணிலைக் கொண்டு சென்றவர்களின் முயற்சிகள் அறுவடையாகும் நேரத்தில் இராணுவத்தின் துணையுடன், நிருபர்கள் பலரின் முன்னிலையில் அராஜகம் அரங்கேற்றப்பட்டிருக்கிறது மேற்குலகை நிலைகுலைய வைத்திருக்கிறது.

ரணில் பதவியேற்றவுடன் வாழ்த்துக்களை அள்ளிச் சொரிந்தவர்கள் இப்போது திகைத்துப் போயுள்ளனர். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரும், இங்கிலாந்தும் முந்திக் கொண்டு தங்கள் விசனத்தையும் கவலையையும் தெரிவித்து இருக்கின்றன. சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிரிவு தமது கடுமையான கண்டனத்தை ‘ருவிட்டரில்’ பதிவு செய்திருக்கிறது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது மக்களின் உரிமை என்றும் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் பத்திரிகையாளர் ‘கோத்தா கோ கம’ வினுள் சென்று அங்கு அகப்பட்டிருப்பவர்களைச் சந்திப்பதைத் தடுக்கக் கூடாது என்றும் அது கடுமையாகச் சாடியிருக்கிறது. இடையே, இலங்கைக்கான இந்தியாவின் மனிதாபிமான உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படும் என்கிறது இந்தியத் தரப்பு. கொழும்பிற்கான கிறிஸ்தவப் பேராயர் தனது கடுமையான கண்டனத்தையும் மக்களின் பாதுகாப்பு தொடர்பான கவலையையும் உடனடியாகவே ஊடகங்களின் முன்னால் பதிவு செய்திருக்கிறார். இன்னும் யார் யாரோவெல்லாம் கவலை தெரிவித்தாலும் இராணுவக் குவிப்பும், நாடளாவிய மக்களின் எதிர்ப்பும், பாதுகாப்பற்ற ஒரு சூழ்நிலையும்தான் இலங்கைத் தீவின் இன்றைய யதார்த்தம்.

ஸ்திரத் தன்மையை நிலைநாட்டுவார் ரணில் என்ற நம்பிக்கையுடன், உதவி வழங்கத் தயார் என்று அறிக்கை விட்ட IMF இனி என்ன முடிவெடுக்கப் போகிறது? ஊடகங்களின் முன்பு துணிச்சலுடன் மக்களைத் தாக்குகிறது இலங்கை இராணுவம். 34 வருடங்களில் முதற் தடவையாக சிங்கள மக்களே குற்றம் சுமத்தும் இராணுவமும் அதன் தலைமைகளும் தொடர்ந்தும் பாதுகாக்கப்படுவார்களா? அல்லது போர்க் குற்றம் புரிந்திருப்பார்கள் என்பதை இனியாவது ஐ.நா நம்புமா? பனாமாவின் கிளர்ச்சி போல இலங்கை நிலைமையும் ஆகிவிடுமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



பாரி

# யாருக்கு வெற்றி?

கோத்தபாய ராஜபக்ச நாட்டை விட்டுத் தப்பி ஓடியதும், பதவியைத் துறந்ததும் மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியிருக்கிறது. வாண வேடிக்கைகளும், பட்டாசு வெடிகளும், ஆட்டமும் பாட்டமும், 'கிரிபத்' ஊட்டி மகிழ்வதுமாக 100 நாட்களைக் கடந்த தமது போராட்டத்திற்குக் கிடைத்த பெருவெற்றியென மக்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.போரை முடிவுக்குக் கொண்டுவந்து, சிங்களத்தைக் காக்கும் 'நவீன துட்ட கைமுனு' என்ற புகழாரத்துடன், அரியணையில் அமர்ந்து கோலோச்சியவன், குடும்பத்தோடு அடித்து விரட்டப்படுவது என்பது சாதாரணமானது அல்ல. கொடியவன் கோத்தபாய போனதும் நல்லாட்சி மலரப்போவதாக பாவம், இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள் போராடியவர்கள்.சமூக வலைத்தளங்கள் முழுவதும் இந்த வெற்றிக் கொண்டாட்டங்களால் நிரம்பி வழிகின்றன.

எதிர்பாராமல் கிடைத்த குருட்டு அதிஷ்டம் என்று ஒரு சிலர் நம்பினாலும், திட்டமிட்டுக் காய் நகர்த்தியதன் பெறுபேறாக, பதில் சனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்திருக்கிறார் நரித் தந்திரத்திற்குப் பெயர் போன ஐயா ரணில் விக்கிரமசிங்க வந்தவுடனேயே அதிகாரத்தைக் கையிலெடுத்துவிட்டார். அவசரகாலச் சட்டம், ஊரடங்கு உத்தரவுகள் என அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது. போராட்டக்காரர்களாக இருந்தவர்கள் இப்போது கலகக்காரர்களாக அடையாளம் காட்டப் பட்டிருக்கின்றனர். இதுவரை போராட்டத்தை வேடிக்கை பார்த்த இராணுவத்தினர் இப்போது விறைப்பாக நிற்கிறார்கள். கோத்தபாய ஓடிப்போகும் வரை கண்ணில்



**சனாதிபதி மாளிகை, பிரதமர் இல்லம், ரூபவாகினி கூட்டுத்தாபனம் என்று அரச கட்டடங்களை மக்கள் பேரெழுச்சியாகக் கைப்பற்றியபோது, ஈரானில் மன்னர் ஷாவிற்கு எதிராக வெடித்த போராட்டம் போல, ஒரு நம்பகத் தன்மை தெரிந்தது உண்மைதான். ஆனால், போராட்டக்காரர்களிடம் ஒரு தெளிவான அரசியற் திட்டமோ அல்லது அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து வழிநடத்தும் ஒரு தலைமையோ இருக்கவில்லை. எல்லாவற்றையும் விட முக்கியமாக, போராட்டத்தில் கிடைத்த வெற்றியைத் தக்கவைக்கும் எந்த ஆயுத பலமும் அவர்களிடம் இருக்கவில்லை. அமைதியாக, அரச கட்டடங்களை விட்டு வெளியேறுகிறோம் என்ற அறிவித்தலுடன் அவர்கள் பின்வாங்கியபோதே இந்த நாடகத்தில் அவர்களின் பாத்திரம் நிறைவுற்று விட்டது என்பது புலனாகியது.**

# யாருக்கு வெற்றி?

தென்படாத எரிபொருட் கப்பல்கள் அவர் போனவுடன் வந்து சேருகின்றன. எரிபொருளின் விலையும் குறைக்கப் பட்டு விட்டது. கடந்த மூன்று மாதகால நெருக்கடி நேரத்தில்,சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தவர்கள் மேல் நடவடிக்கையும் எடுக்கப் போகிறாராம் பதில் சனாதிபதி.

கோத்தபாய ஓடிப் போனதற்கும், ரணில் பதவியேற்றதற்கும் பின்னால் பெரிய தலைகள் திட்டமிட்டு செயற்பட்டிருப்பது தெளிவாகப் புலப்படுகிறது.

தமிழ்மக்களைக் கொன்று குவித்து, அவர்கள் உடமைகளைச் சூறையாடி, சொந்த இடங்களிலிருந்து விரட்டியடித்த ஒரு இனப்படுகொலையாளன் கோத்தபாய. தன்னைப் பூசித்த மக்களாலேயே கோத்தபாய விரட்டியடிக்கப் பட்டது தமிழ் மக்களைப் பொறுத்தவரை 'காலம் கடந்து கிடைத்த ஒரு தீர்ப்பு'.ஆனால்,தமிழ் மக்களுக்கு இழைத்தது போல, சிங்கள மக்களுக்கு கோத்தபாய பெரிதாக எந்தத் தீங்கும் செய்யவில்லை – எல்லா அரசியல்வாதிகளையும் போல ராஜபக்ச குடும்பமும் ஊழல் செய்ததைத் தவிர. அப்படியிருக்க, எவ்வாறு இப்படியொரு பிரம்மாண்டமான மக்கள் எழுச்சி ஏற்பட்டது? அல்லது ஏற்படுத்தப்பட்டது? பின்னணியில் யார் இருக்கிறார்கள்?

கோத்தபாய ஓரங்கட்டப் படுவதால் யாருக்கு நன்மை? திடீரென்று எவ்வாறு எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு வந்தது? கோத்தா போனகையுடன், நாட்டினுள் மறுபடியும் எரிபொருள் வந்திறங்கியது எப்படி? இவ்வாறு பல்வேறு வகையான ஐயப்பாடுகளின் பின்னணியில் பிரச்சனையை ஆராய வேண்டியுள்ளது.

சீனாவின் பக்கம் சாயும் கோத்தபாயவின் கொள்கைகளின் மேல் சர்வதேச மட்டத்தில் சில நாடுகள், குறிப்பாக இந்தியா, அமெரிக்கா, கடும் அதிருப்தியுடன்இருப்பது வெளிப்படை. மக்கள் பலத்துடன் கோலோச்சும் ஒரு குடும்பத்தை பதவியில் இருந்து இறக்குவதும் தமக்கு சார்பானவர்களை பதவியில் ஏற்றுவதும்யாருக்கும் அவ்வளவு எளிதான விடயமல்ல.தவிரவும், ராஜபக்ச குடும்பத்தினரின் கையில் முக்கியமான அத்தனை அமைச்சுகளும் இருக்கின்றன. குடும்பத்தினர் மிகவும் ஒற்றுமையாக, பிளவுபடுத்த முடியாதவாறு இருக்கி









# யாருக்கு வெற்றி?

றார்கள். எனவே, அவர்களை உச்சத்தில் ஏற்றி வைத்த மக்களை வைத்தே அவர்களைப் பதவியிறக்கத் தீர்மானித்ததில்தான் இந்திய, அமெரிக்க கூட்டுப் புலனாய்வு நடவடிக்கைகள் வெற்றி பெற்றிருப்பதாகத் தெரிகிறது. மக்களை எதிர்க்க வைக்க வேண்டும்,

கோத்தபாயவின் தீவிர விசுவாசிகளான முப்படைகளையும் அவரிடமிருந்து பிரிக்க வேண்டும். இவ்விரு வேலைகளும் ஒரு குறுகிய காலத்துக்குள்செய்து முடிக்கப் பட்டிருக்கின்றன.

இலங்கை கடன்சுமையில் இருப்பதைக் காரணம்காட்டி, இலங்கைக்குக் கடன் வழங்குவதைத் திட்டமிட்டு நிறுத்தியதன் மூலம் ஆட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள் இவர்கள். அந்நிய செலாவணி கையிருப்பு தீர்ந்து போக, பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலையை உருவாக்கி, பணவீக்கத்தை அதிகரித்திருக்கிறார்கள். மக்கள் பஞ்சத்தில் வாடும் நிலையில், எரிபொருள் வழங்கலும் முற்றாக நிறுத்தப்பட,வேறு வழியில்லாமல் வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் மக்கள். சிறுசிறு குழுக்களாக அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்து குரல் கொடுத்தவர்கள், இதுவரை காலமும் இல்லாதவாறு, திடீரென்று, குறுகிய கால இடைவெளியில் ஒன்றிணைந்து, ஒழுங்கமைக்கப்பட்ட மாபெரும் ஒரு போராட்ட சக்தியாகப் பரிணமித்து இருக்கிறார்கள். காலிமுகத் திடலில் குடியேறி ‘கோத்தா கோ கம’ கிராமத்தையே உருவாக்கி விட்டார்கள். இவையெல்லாவற்றையும் பார்க்கும் போது, ஒரு மக்கள் சக்தி தானாகப் பரிணமித்ததாகத் தெரியவில்லை. பின்னணியில் ஒரு சக்தி இருந்து இவர்களை ஆட்டுவிப்பது தெளிவாகப் புலப்படுகிறது. இந்த சமயத்தில், இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவருடன் வந்த அவரது காப்பாளர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் மீண்டும் நாடு திரும்பவில்லை என்ற பத்திரிகைச் செய்தி ஏனோ ஞாபகத்திற்கு வருகிறது.



எரிபொருள் இல்லாமல் நாடு முழுவதும் மக்கள் நீண்ட வரிசைகளில் நின்றபோதும் போராட்டக்காரர்களுக்குதட்டுப்பாடு எதுவும் இருக்கவில்லை. மூன்று மாத காலத்திற்கும் மேல் அவர்கள் போராட்ட களத்தில் நிற்கிறார்கள், இருந்தும் உணவிற்கோ குடிநீருக்கோ அல்லது பிற வசதிகளுக்கோ எந்தக் குறைபாடும் வரவில்லை. ‘அரகாலியா’ எனப்படுகின்ற இந்த ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டக் குழுவில் சுமார் 70 இற்கும் மேற்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இடதுசாரி, வலதுசாரிகள், தீவிர இடதுசாரிகள், மாணவர்கள் என்று வெவ்வேறு கொள்கைகளைக் கொண்டவர்கள் அனைவரும் கோத்தாவை வெளியேற்றுவதற்காக மட்டுமேஒன்றாகக்கூடி ஒரு மக்கள் பேரெழுச்சியை நடத்தினார்கள் என்பது நம்பும்படியாக இல்லை. இந்தப் பேரெழுச்சிக்கு செலவழிக்கப்பட்ட பணம் எங்கிருந்து வந்தது?போராட்டத்தின் முன்னணியில் நின்ற மத்திய வர்க்க, ஓரளவு மேல் வர்க்கத்தவர்களோடு,தமக்கு விடிவு கிடைக்கும்

# யாருக்கு வெற்றி?

என்ற நம்பிக்கையுடன் அப்பாவி ஏழைமக்களும் இணைந்து கொண்டதால் இந்தப் பிரம்மாண்ட எழுச்சி சாத்தியமாகி இருக்கிறது.

சனாதிபதி மாளிகை, பிரதமர் இல்லம், ரூபவாகினி கூட்டுத்தாபனம் என்று அரச கட்டடங்களை மக்கள் பேரெழுச்சியாகக் கைப்பற்றியபோது, ஈரானில் ‘மன்னர் ஷா’விற்கு எதிராக வெடித்த போராட்டம் போல, ஒரு நம்பகத் தன்மை தெரிந்தது உண்மைதான்.ஆனால், போராட்டக்காரர்களிடம் ஒரு தெளிவான அரசியற் திட்டமோ அல்லதுஅவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து வழிநடத்தும் ஒரு தலைமையோ இருக்கவில்லை, எல்லாவற்றையும் விட முக்கியமாக, போராட்டத்தில் கிடைத்த வெற்றியைத் தக்கவைக்கும் எந்த ஆயுத பலமும் அவர்களிடம் இருக்கவில்லை. அமைதியாக, அரச கட்டடங்களை விட்டு வெளியேறுகிறோம் என்ற அறிவித்தலுடன் அவர்கள் பின்வாங்கியபோதே இந்த நாடகத்தில் அவர்களின் பாத்திரம் நிறைவுற்று விட்டது என்பது புலனாகியது.

மறுபுறத்தில், ரணில் பிரதமராகியதும் ‘இனித்தான் பிரச்சனை பெரிதாக வரப்போகிறது’ என்று ஆரூடம் சொன்னதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. இனப்படுகொலைகளுக்கு நீதி கேட்டு ஐ.நா வின்முன் பல வருடங்களாகப் போராடும் ஈழத்தமிழர்களால் ராஜபக்ச குடும்பத்திற்கு வரவிருந்த பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நரி வேலையையும் ஐ.நாவில் செய்து முடித்திருந்தார் அவர். ராஜபக்ச குடும்பத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருப்பவர், வளைந்து கொடுத்து தன் காரியத்தை சாதிக்க வல்லவர் என்று பெயர் பெற்றிருப்பவர், கோத்தாவுக்கு ஏற்ற மாற்றீடாக அமெரிக்க, இந்தியக் கண்களுக்குத் தெரிவதில் ஆச்சரியம் ஏதுமில்லை.தேசியப் பட்டியலில் இருந்து பாராளுமன்ற உறுப்பினராகியவர் ரணில். அவரது கட்சியின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரும் இவர்தான். மகிந்த பிரதமர் பதவியில் இருந்து விரட்டப்பட்ட போது பிரதமராக அவதாரம் எடுத்து, கோத்தா தோற்று ஓடியபோது பதில் சனாதிபதியாக அதிகாரத்தில் அமர்ந்து, இதோ... தோற்றுப் போன கட்சியைச் சேர்ந்தாலும் மொட்டுக் கட்சியின் பேராதரவுடன் சனாதிபதியாக பதவியேற்கவும் தயாராகி விட்டார் அவர். இவ்வளவும் மூன்று மாதகால இடைவெளியில்.

இராணுவத்தின் வகிபாகத்தைப் பார்த்தால்.




கோத்தாவின் பலமாக, அவரின் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருந்தவர்கள் இராணுவத்தினர். இவர்களை நயமாகப் பேசியும் பயமுறுத்தியும் வழிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மேலதிக பயிற்சிகள், கூட்டுப் பயிற்சிகள், சிறப்புப் பயிற்சிகள் என்று அமெரிக்காவுக்கும், இந்தியாவிற்கும் பறந்த நடுத்தர மட்ட அதிகாரிகள், அங்கு புலனாய்வாளர்களால் தொடர்ந்தும் மூளைச் சலவை செய்யப் பட்டிருக்கிறார்கள். இந்த அதிகாரிகள்தமிழர்களுக்கெதிராக நிகழ்த்தப்பட்ட இனவழிப்பின்போது இளம் சிப்பாய்களாக இருந்தவர்கள், சண்டைகளில் நின்று அவர்களின் மேலதிகாரிகள் சொன்னதை

“மக்கள் பஞ்சத்தில் வாடும் நிலையில், எரிபொருள் வழங்கலும் முற்றாக நிறுத்தப்பட, வேறு வழியில்லாமல் வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் மக்கள். சிறுசிறு குழுக்களாக அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்து குரல் கொடுத்தவர்கள், இதுவரை காலமும் இல்லாதவாறு, திடீரென்று, குறுகிய கால இடைவெளியில் ஒன்றிணைந்து, **ஒழுங்கமைக்கப்பட்ட மாபெரும் ஒரு போராட்ட சக்தியாகப் பரிணமித்து இருக்கிறார்கள். காலிமுகத் திடலில் குடியேறி ‘கோத்தா கோ கம’ கிராமத்தையே உருவாக்கி விட்டார்கள். இவையெல்லாவற்றையும் பார்க்கும் போது, ஒரு மக்கள் சக்தி தானாகப் பரிணமித்ததாகத் தெரியவில்லை. பின்னணியில் ஒரு சக்தி இருந்து இவர்களை ஆட்டுவிப்பது தெளிவாகப் புலப்படுகிறது.**”





நிறைவேற்றியவர்கள். இப்போது அதிகாரிகள் ஆகியிருக்கிறார்கள். ‘தண்டனை என்று வரும்போது எல்லா உயரதிகாரிகளும் சிப்பாய்களாகவிருந்த உங்கள் மேல் பழியைப் போட்டு தாங்கள் தப்பித்து விடுவார்கள்’ என்று அவர்களை நம்ப வைத்தும், தாம் சேகரித்து வைத்திருந்த, யுத்தகாலத்தில் சிப்பாய்கள் செய்த கொடூரங்களின் சாட்சியங்களை அவர்களுக்குக் காட்டி, தமது சொற்படி நடக்காவிட்டால் இவை ஐ.நா விற்கு அனுப்பப்படும் என்றும் பயம் காட்டியும் அந்த அதிகாரிகளைத் தம்வசம் ஆக்கியுள்ளனர் அந்நிய புலனாய்வாளர்கள்.

கோத்தபாய உத்தரவிட்டும், இராணுவம் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததன் காரணம் இதுதான். இதனால் தான், கட்டளைக்கு அடிபணிய மறுத்த சவேந்திர சில்வா பதவி உயர்வு என்ற பெயரில் காணாமற்போய், லியனகே அவரின் இடத்திற்கு நியமிக்கப் பட்டிருந்தார். ரணில் பதில் சனாதிபதி ஆகியதும் மறுபடி லியனகே காணாமற் போயிருக்கிறார், சவேந்திர சில்வா மீண்டும் இராணுவத்தின் கட்டளையதிகாரி ஆகியிருக்கிறார். அது மட்டுமல்லாமல், கொழும்பு நகரில் இராணுவத்தினர் குவிக்கப் படுவதும், சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், ரணிலின் பின்னால் இராணுவத்தினர் இருப்பதை உறுதி செய்கின்றன. திட்டமிட்டபடி, ரணில் பதவிக்கு வந்ததும் ராணுவம் நாட்டின் அதிபரின் கட்டளையின் கீழ் இயங்கத் தயாராகி விட்டது. ஆட்டத்தைக் கலைக்க மக்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். கப்பல்கள் வரத் தொடங்கிவிட்டன. போராட்டத்திற்கு ஆதரவுக் கரம் நீட்டிய மேற்தட்டு, மத்தியதர வர்க்கத்தினர் இப்போது எங்கேயென்றே தெரியவில்லை.

போராட்டம் நடைபெறும்போது வாளாவிருந்த உலகநாடுகள் இப்போது கலகக்காரர்கள் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட வேண்டும் என்கின்றன. இலங்கையிலும், போராட்ட வீரர்களாகப் போற்றப்பட்டவர்கள் இன்று கலகக்காரர்களாகி விட்டனர். அவர்கள் இராணுவத்தால் தாக்கப் படுகின்றனர், கைதுகள் இடம் பெற்றிருக்கின்றன, சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததாக அவர்கள் மேல் வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

## மொத்தத்தில், நடந்ததைப் பார்த்தால்

1. மேற்கு நாடுகளுக்கு சார்பான ரணில் விக்ரமதுங்க பதவியில் அமர்த்தப்பட்டு இருக்கிறார். இவர் ராஜபக்ச குடும்பத்தவருக்கும் ஆதரவாக இருப்பதால் அவர்களின் ஆதரவும் ரணிலுக்கு உண்டு. பதிலுக்கு, ராஜபக்சர்களையும், அவர்களின் சொத்துக்களையும் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கிறார் ரணில். அவர்கள் மீளவும் அரசியலில் திரும்பி வருவதற்குச் சாத்தியமான பாதையையும் திறந்து வைத்திருப்பார் ரணில்.
2. மேற்கிற்கு பிடிக்காத கோத்தா குடும்பம் அப்புறப் படுத்தப்பட்டு விட்டது.
3. இராணுவம் ரணிலுக்குச் சார்பானதாக மாற்றப்பட்டு விட்டது. சர்வ அதிகாரங்களும் இப்போது ரணிலிடம் உள்ளன. ஆட்டுவிப்பவர்கள் சொல்லுக்கு ஆடத் தயாராகிவிட்டார் ரணில்.
4. எரிபொருளுக்காக புரட்சி செய்த மக்கள் கூட்டம் எரிபொருள் வரத் தொடங்கியதும் சமாதானமாகி விட்டார்கள். சோற்றுச் சண்டைபோல் முடிந்தது மக்கள் கிளர்ச்சி.
5. தமிழரின் பிரச்சனைகள் எவையும் தீர்க்கப்படவில்லை.பழம்பெரும் தமிழ் அரசியல்வாதிகள் ஆதாயத்தைப் பார்த்து எந்தப் பக்கம் சேர்வார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான்பார்க்க வேண்டும். திரைமறைவில்,இனப்படுகொலையாளர்களைக் காப்பாற்றும் சிங்கள அரசின்நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.சர்வதேசம், தனக்கு தேவையானதைப் பெற்றுக்கொள்ள மட்டுமே தமிழர் பிரச்சனையைக் கையிலெடுக்கிறது. தமிழர் பிரதேசத்தை அபகரித்து சிங்கள பூமியாக்கும் சிங்களத்தின் திட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை.

இப்போது சொல்லுங்கள் வெற்றி பெற்றவர் யார்?

# சிறுதானிய பயன்பாடு

*வரகும் தினையும் இல்லாத உணவை உணவாகவே கருதமுடியாதென்று புறநானூறு விதந்துரைக்கின்றது. சிறுதானியங்கள் எமது உணவுப் பாரம்பரியம் என்பதுடன் ஊட்டச்சத்து மிகுந்த மாற்றுத் தானியங்களாகும்.*

**“கருங்கால் வரகே இருங்கதிர்த்தினையே<br>சிறுகொடிக்கொள்ளே பொறிகிளர்<br>அவரையொடு இந்நான்கல்லது<br>உணாவும் இல்லை”**

**(புறநானூறு: 335)**



*காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்களைச் சகித்துவளரக்கூடிய தன்மை உள்ளமை காரணமாக, இன்றைய காலத்தின் தவிர்க்கமுடியாத தெரிவாகச் சிறுதானியங்கள் உருவாகின்றன.*

*நமது உணவுத் தெரிவே எந்தத் தானியத்தினை விவசாயி விதைக்கத் தேர்ந்தெடுக்கின்றான் என்பதைத் தீர்மானிக்கின்றது. நமது உணவுத் தெரிவே நாம்வாழும் நிலத்தில் உயிர்ப் பல்வகைமை காக்கப்படுவதை உறுதி செய்கின்றது. ஆகவே மாற்றம் நம்மிடம் இருந்து ஆரம்பிக்கட்டும்!*

புலரி



# குருந்தனூர் மலை



தமிழர்களின் பாரம்பரிய நிலப்பிரதேசத்தில் அமைந்திருப்பது குருந்தனூர் மலை எனப்படும் குருந்தூர் மலை. இங்கு, தற்போது சிதிலமடைந்த நிலையில் கிடக்கிறது பண்டைக்காலத்து ஆதி சிவனின் ஐயனார் கோவில்.இங்கு, ஐயனாருக்கு படையல் வைத்து வழிபாடு செய்யும் வழக்கத்தை சைவர்கள்அன்று தொட்டு அண்மைக்காலம் வரையும் தொடர்கின்றனர்.தமிழர் பிரதேசத்தில், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும், சைவர்களின் வழிபாட்டு இடங்களையும், தமிழர்களின் பண்டைய வரலாற்றுடன் தொடர்புடையதாக வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த, பாதுகாக்கப்பட வேண்டிய இடங்களையும் குறிவைத்து நில அபகரிப்பை திட்டமிட்டு நடத்தி வருகிறது இனவாதம் கக்கும் சிங்கள அரசு.

‘அந்த இடங்களில் பௌத்த வழிபாடு நடைபெற்றது, அது பௌத்தர்கள் வாழ்ந்த இடம்’ என்று பொய்யாக நிறுவி, அந்தந்த இடங்களில் விகாரைகளைக் கட்டி, தமிழர் நிலங்களை அபகரித்து, அவர்களின் பாரம்பரிய மண்ணிலிருந்து அவர்களை விரட்டியடிப்பதுதான் சிங்கள அரசின் நீண்ட காலத் திட்டம். இதனை முறியடித்து, தாம் பாரம்பரியமாக வாழ்ந்த நிலத்தைத் தக்க வைக்க தமிழ் மக்கள் நித்தம் போராட வேண்டியுள்ளது. இந்த வகையில், சில வருடங்களுக்கு முன்னர், தமிழர்களின் நீண்ட கால வழிபாட்டிடமான குருந்தனூர் மலையும் இரவோடிரவாக இராணுவ காவலுடன் வந்த சில பிக்குமார்களாலும் சிங்களவர்கள் சிலராலும் சுவீகரிக்கப்பட இருந்தது. திடீரென்று அங்கு முளைத்த புத்தர் சிலை அப் பிரதேச மக்களை கோபம் கொள்ள வைத்தது. நீதிமன்றத்தின் தடையுத்தரவையும் மீறி அங்கு கபோக் கல்லினால் ஆன புத்தர் சிலையும் விகாரையும் வேகவேகமாகக் கட்டும் வேலைகள் நடைபெற்றன. இப்போது அவை உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவு கிடைத்துள்ளது.

> **குருந்தூர் மலையின் சுமார் 200ஏக்கர் நிலப்பரப்பு முழுவதும், ஏராளமான பண்டைய காலத்திய கட்டட இடிபாடுகள் சிதிலமடைந்த நிலையில் காணப்படுகின்றன. ஆதி சிவனின் வடிவமான ஐயனார் குடிகொண்டிருப்பதற்கான சான்றுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இன்னமும் காணப்படுகின்றன. காலங்காலமாக, அங்கிருக்கும் சூலத்தின் முன்னால் படையல் வைத்து வழிபடுவதை இந்துக்கள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.**

## குருந்தனூர் மலை எங்குள்ளது?

வடமாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் நெடுங்கேணி என்னும் இடம் உள்ளது. இங்கிருந்து வடகிழக்கே சுமார் 14 கிலோமீற்றர் தொலைவில் தண்ணிமுறிப்புக் குளம் உள்ளது. இந்தக் குளத்திற்கு வடக்கே கம்பீரமாக எழுந்து நிற்பதுதான் குருந்தூர் மலை.

குருந்தூர் மலையின் சுமார் 200ஏக்கர் நிலப்பரப்பு முழுவதும்,ஏராளமான பண்டைய காலத்திய கட்டட இடிபாடுகள் சிதிலமடைந்த நிலையில் காணப்படுகின்றன. ஆதி சிவனின் வடிவமான ஐயனார் குடிகொண்டிருப்பதற்கான சான்றுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இன்னமும் காணப்படுகின்றன. காலங்காலமாக, அங்கிருக்கும் சூலத்தின் முன்னால் படையல் வைத்து வழிபடுவதை இந்துக்கள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.



117 வருடங்களின் முன், எச்.சி.பி பெல் என்ற ஒரு ஆங்கில ஆராய்ச்சியாளர் குருந்தனூர் மலைப்பிரதேசத்தை ஆய்வு செய்துள்ளார். குருந்தனூர் மலையில் மிகப்பெரிய சிவாலயம் இருந்ததற்கான ஆதாரங்கள் அங்கு தென்படுவதாக, 1905 இல், இலங்கைத் தொல்பொருட் திணைக்களத்தின் Archaeological Survey of Ceylon &Annual Report எனும் அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். பெல் அவர்களின் அறிக்கையின் படி, இந்த மலையில் ஒரு பெரிய சிவன் கோயிலும் தீர்த்தக்கேணியும் இருந்தது உறுதியாகிறது. இவை சோழர் காலத்தில் அல்லது அதற்கு முற்பட்ட காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்கிறார் அவர்.

குருந்தூர் மலையில்‘பெல்’ அவர்கள்கண்ட ஆவுடையார் [ஒரு சிவலிங்கத்தில் இரண்டு பாகங்கள் உள்ளன. மேலே உருளையான வடிவிலுள்ள பாகம் லிங்கம் என்றும், அதன் கீழ் பரந்த வட்ட வடிவிலான பாகத்தை ஆவுடையார் என்றும் சொல்வார்கள்.] சுமார் 10 அடி சுற்றளவுள்ளதாக இருந்திருக்கிறது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற பெரிய சிவாலயங்களில் காணப்படும் பெரிய சிவலிங்கங்களை ஒத்ததாக இது காணப்பட்டுள்ளதால், குருந்தூர் மலை சிவாலயமும் மிகத் தொன்மையானதாக இருந்திருக்க வேண்டும். அதேசமயத்தில், வன்னியின் மேற்குப் பக்கத்தில் உள்ள வவுனிக்குளம் எல்லாள மன்னனால் கட்டப்பட்டிருக்கக் கூடிய சான்றுகள் இருப்பதாக‘ஹென்றி பாக்கர்’ என்பவரின் நூல் குறிப்பிடுகிறது. இதன்படி பார்த்தால், வன்னியின் கிழக்கே அமைந்துள்ள குருந்தூர்மலையிலும் எல்லாள மன்னன் காலத்தில் கோவில் கட்டப்பட்டிருக்கவும் வாய்ப்புள்ளது.

127 வருடங்களுக்கு முன்னர், இன்னுமொரு ஆங்கில ஆய்வாளரான திரு ஜே.பி.லூயிஸ் அவர்கள் குருந்தூர் மலையிலுள்ள சிவாலயம் பற்றி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். 1895 இல் அவர் எழுதிய “Manual of the Vanni Districts‘ என்ற நூலில், குருந்தூர் மலையில் தான் கண்ட சிவன் கோவில் மற்றும் நாக கோவில் பற்றி எழுதியுள்ளார். தலை உடைந்த நிலையிலுள்ள நந்தி சிலை, வணங்கிய நிலையிலிருக்கும் சிற்பம், என்பனவற்றைப் பற்றி மட்டுமல்லாமல் ஐந்து தலை நாகத்தின் கற்சிலையுடன் கூடிய ஒரு பண்டைய கோயில் இருந்ததையும் அவர் அதில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொ.ஆ. 1215 இல், [ பொதுமக்கள் ஆண்டு –கி.மு, கி.பி என்ற வருடக்கணக்கு பாவனைக்கு வருமுன், பொதுமக்கள் ஆண்டு என்று குறிப்பிடுவதே வழக்கத்தில் இருந்தது ] கலிங்கத்தைச் சேர்ந்த மாகோன், ஜயபாகு என்ற தமிழ் மன்னர்கள் இலங்கை மீது





படையெடுத்து வந்து40 வருடங்கள் ( 1215- 1255 ) ஆட்சி புரிந்த தாக நூல்கள் குறிப்பிடுகின்றன. இவர்கள் வீரசைவ மரபைப் பரப்பிய மன்னர்கள் என்றும், இவர்கள் அமைத்த மிக முக்கியமான ஏழு கோட்டைகளில் குருந்தூர் மலையும் ஒன்று என்றும் சொல்லப்படுகிறது. சூழவம்சத்திலும், பூஜாவலிய, ராஜாவலிய, நிக்காய, சங்கிரஹய என்ற நூல்களிலும்கூட இந்த விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது.

இவையெல்லாம் குருந்தூர் மலையைப் பற்றிய நீண்டகால வரலாற்றுச் சான்றுகள்.முல்லைத்தீவு குமுழமுனைப் பிரதேசத்திலேயே உயரமான இடம் குருந்தூர் மலைதான். அங்கிருந்து நாயாறு கடல் நீரேரி, செம்மலை சிவன் கோவில் போன்ற இடங்களை இலகுவாகப் பார்க்க முடியும். சுற்றிவரவுள்ள ஒரு பெரிய பிரதேசத்தை அங்கிருந்து கண்காணிக்கவும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் முடியும்.இதனால், சிங்கள அரசு எப்போதும் இந்த இடத்தின் மீது ஒரு கண் வைத்திருந்தது. 1932 இல்வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலில் இந்த மலையை தொல்பொருள் இடமாகப் பிரகடனப்படுத்தி இருந்ததால், தமிழ் மக்களின் நடமாட்டம் அங்கு கட்டுப் படுத்தப்பட்டது. ஆனால் வழிபாட்டிற்குத் தடை விதிக்கப்படாத காரணத்தால், வருடத்திற்கு ஒருமுறையோ இரு முறைகளோ அங்கு சென்று பொங்கி, படையலிட்டு வழிபட்டனர் மக்கள்.

**குருந்தூர் மலையிலுள்ள தாரா லிங்கத்தையும் கருவறையையும் விகாரை என்று சிங்களத் தொல் லியலாளர்களும் சாயம் பூச முயன்றாலும், தமிழ்நாட்டில் இருக்கும் சில பல்லவர் காலத்து தாராலிங்க வடிவினை ஒத்ததாக இத்தம்பம் இருப்பதை மறைக்க முடியாது. இந்த தாராலிங்கத்தின் விட்டமும் பெல் அவர்களது ஆய்வில் கண்ட ஆவுடையாரின் விட்டமும் ஒத்துப்போவதால் இவை ஒரே சிவலிங்கத்தின் பாகங்களாக இருக்க வேண்டும்.**



இவையெல்லாம் 2018 வரைதான். 2018 இல் இராணுவத்தின் உதவியோடு அங்கு வந்த சில பிக்குகள் சூலத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டு அந்த இடத்தில் புத்தர் சிலையை வைத்து, அந்த இடத்தை உரிமை கொண்டாட முனைந்தனர். இராணுவத்தினதும் கொழும்பிலிருந்து அழைத்து வரப்பட்ட தொல்லியலாளர்களினதும் உதவியுடன் தமிழர் சான்றுகளை அழித்து, அந்த இடத்தில் பௌத்த



கற்தூண்கள், சிதிலமடைந்த நிலையில் உள்ள நந்தி சிலை, ஆவுடையார், பக்கத்தில் 25 அடி ஆழக் கிணறு ( 20 அடிவரை செங்கல் அதற்குக் கீழே பாறை), உட்கார்ந்தபடி வணங்கும் தோற்றத்தில் மனித சிலை, பல நாகக் கற்கள் என்று ஏராளமான புராதன எச்சங்கள் இன்னும் அங்கே உள்ளன.

குருந்தூர் மலையில் முறையான அகழ்வாராய்ச்சி எதுவும் இன்னமும் நடைபெறவில்லை –பௌத்தத்தை நிரூபிக்க கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டவர்களைத் தவிர. இங்கு ( சிங்களவர் அல்லாத ) பக்கச் சார்பில்லாத, முறையான அகழ்வாராய்ச்சி நடைபெற வேண்டும். அதுவரையில் இந்த இடம் சிங்கள முலாம் பூசப்பட முடியாதவாறு காக்கப்பட



சாயலில் பொய்யான சான்றுகளை நிறுவ இன்று வரை முயல்கின்றனர். மக்களின் கடுமையான எதிர்ப்பினால் அந்த நேரத்தில் அந்த முயற்சி கைவிடப்பட்டாலும் அவர்கள் திரும்பத்திரும்ப அத்துமீற முயன்றதால் பிரச்சனை நீதிமன்றம்வரை சென்றது. எந்தக் கட்டுமான வேலைகளும் செய்யக்கூடாது என்ற நீதிமன்ற தடையுத்தரவையும் மீறி, கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் ஒரு புராதன பாணியில் பழைய காலத்து கட்டடங்களை ஒத்த செங்கற்களைப் பயன்படுத்தி, விகாரையைக் கட்டியுழுப்பும் அவர்களின் முயற்சி துரித கதியில் நடக்கிறது, சிலை நிர்மாணம் முடிவடைந்து விழா வரைக்கும் வந்துவிட்டது.

இப்போது, 14/07/2022 அன்று, கட்டப்படும் விகாரையும் சிலைகளும் சட்டத்திற்கு விரோதமானவை என்றும், இந்த சட்டவிரோத நிர்மாணம் உடனடியாக அகற்றப்பட்டு பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் முல்லைத்தீவு நீதிமன்றம் அதிரடி உத்தரவு போட்டுள்ளது. அப்பிரதேசம் தொடர்பான தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டு, அது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அது கட்டளையிட்டு இருக்கிறது.

குருந்தூர் மலையிலுள்ள தாராலிங்கத்தையும் கருவறையையும் விகாரை என்று சிங்களத் தொல்லியலாளர்களும் சாயம் பூச முயன்றாலும், தமிழ்நாட்டில் இருக்கும் சில பல்லவர் காலத்து தாராலிங்க வடிவினை ஒத்ததாக இத்தம்பம் இருப்பதை மறைக்க முடியாது. இந்த தாராலிங்கத்தின் விட்டமும்‘பெல்’ அவர்களது ஆய்வில் கண்ட ஆவுடையாரின் விட்டமும் ஒத்துப்போவதால் இவை ஒரே சிவலிங்கத்தின் பாகங்களாக இருக்க வேண்டும்.

குருந்தன் குளத்தின் மேற்கே, குருந்தனூர் மலையின் தெற்குப் புறச் சரிவில் ‘குருந்தனூர்’ என்னும் பட்டினம் புதைந்து கிடப்பதாக நம்பப்படுகிறது.இப்போது அப்பகுதி முழுவதும் அடர் காடாக காணப்படுகிறது. மலையில், மூன்று பக்கமும் சிதிலமடைந்த நிலையிலிருக்கும் மதில்களாலும் நான்காவது புறத்தில் குளத்தினாலும் சூழப்பட்ட சுமார் 200 ஏக்கர் நிலத்தில் பண்டைக்கால கட்டட சிதைவுகள், கிணறுகள், சிற்பங்கள், சிறிய தூபி, அருகில் பல

வேண்டும். பௌத்தத்தைக் காக்கும் இனவாத அரசியலில் மாற்றம் எதுவும் வராத இந்த நிலையில், மீண்டும் மும்முரமாக நில அபகரிப்பு நடந்தேறலாம். கூட்டாக இணைந்து இம்முயற்சிகளை முறியடித்து தமது வாழ்விடங்களைக் காக்க வேண்டிய கடமை எல்லோருக்கும் உள்ளது.



கலை



# சிறப்புக் குழந்தைகள்



சமர்த்துக் குழந்தைகளாக துறுதுறுவென ஓடி விளையாடினால் 'சுட்டிக் குழந்தை' என இரசிக்கிறோம் நாம். ஐம்புலன்களால் துல்லியமாக உணர்ந்து வித்தியாசமாக நடந்து கொள்ளும் சிறப்புக் குழந்தைகள் பற்றி இச் சமூகம் கண்டு கொள்வதில்லை. பிள்ளைகள் வளர்ப்பினை ஒரு குறையாகக் கூறி,சமூகத்தின் மத்தியில் பெற்றோரைக் குறை கூறுபவர்களைப் புறந்தள்ளி நாம் இச் சிறப்பு குழந்தைகள் பற்றி அறிந்து கொள்வோம்.

## சிறப்புக் குழந்தைகள் என்றால் யார்?

உடல்வளர்ச்சிஅடிப்படையில் ஊனம், தசை சிதைவு,வலிப்பு,பார்வைக் குறைபாடு, காது கேட்காத, வாய் பேசாத, மன வளர்ச்சியின் அடிப்படையில் ஆட்டிசம்,டிஸ்லெக்ஸியா எனக் கற்றல் குறைபாடுகளுடன், சம வயதுக் குழந்தைகளிடம் சேர்ந்து பழகுவதில் கோபப்படும் வித்தியாசமான மனநிலைகளை உடையகுழந்தைகளையே நாம் சிறப்புக் குழந்தைகள் என்கிறோம்.

சில குழந்தைகள் பிறக்கும் போது சாதாரணமானவர் போலக்காணப்படுவர். ஆனால் இக் குழந்தைகளின் அறிவு சம்மந்தமான வளர்ச்சிகளை உன்னிப்பாக கவனிப்பதன் மூலம் இவர்கள் மற்றக் குழந்தைகளிலிருந்து சற்று வேறுபடுவதைக் கண்டறியலாம். இப்படியான குழந்தைகளில் தென்படும் மாற்றம் பெரும்பாலும் ஐந்து, ஆறு வயதிலேயே வெளித் தெரிகின்றது.இக் குழந்தைகளை சமூகத்தில் மற்றவர்களுடன்ஒன்ற வைப்பது என்பது மிகவும் கடினமான பணியே. இக் குழந்தைகளின் ஐம்புலன்களும் சாதாரண குழந்தைகளை விட பன்மடங்கு மேலானவை.நம் கண்ணுக்கு புலப்படாத வித்தியாசமான ஒரு பொருள் அல்லது காட்சி இக் குழந்தைகளுக்கு சிறப்பாக புலப்படும் என்கிறது அறிவியல்.



இவர்களின் குறைபாடுடைய புலனை ஈடு செய்வதுபோல மற்றைய புலன்கள் கூர்மையாக வேலை செய்வதால், இவர்களால் பல அசாதாரண விசயங்களை உணர முடியும், அசாதாரணமாகச் செயலாற்ற முடியும். நாம் பிடிக்கவில்லை எனும் சுவை அவர்களுக்கு பிடிக்கும். எமது சிறிய தொடு உணர்வு கூட பெரும் தொடுகை போல அவர்களுக்குத் தோன்றும்.இதனாற்தான் சில வேளைகளில் இவர்கள்எதிர்த் தாக்குதல் செய்தல், திடீரென ஒன்றி நடத்தல், வலியின்றி வீறாப்பாய் நிற்றல் அசாதாரண செயல்களைப் பிரதிபலிப்பாகக்காட்டுகின்றனர்.



தமக்குத் தேவையானவையைச் சொல்லத்தெரியாமல், கோபப்படுவது, சிரிப்பது, மௌனமாய் இருப்பது என்பதை தவிர வேறு உலகம் அறியாதவர்கள் இவர்கள்.நாம் அழைக்கும் போது பேசாமல் இருப்பது, எது வேண்டும் என்பதைச் சொல்லத் தெரியாமல் இருப்பது, தாம் பழகிய பொருட்களிற்கூட அளவு கடந்த பிரியம் வைத்து அப்பொருட்களைத் தம் கூடவே வைத்திருப்பது என்று எப்போதும் இக் குழந்தைகள் ஏதோ ஒரு வகையில் அதிகமாக வேலை செய்து கொண்டிருப்பவர்கள்போலத் தென்படுவர்.

'ஆட்டிசம்' எனப்படுகின்ற ஏதோவொரு புலன் வளர்ச்சி குன்றிய அல்லது இன்னொரு வகையில் மற்றப் புலன்களின் கூர்மையான செயற்பாடுள்ள இக் குழந்தைகள் மற்றக் குழந்தைகளைப் போல் செயற்படாது, சில சமயங்களில் தமக்குத் தோன்றியதையே செய்யும் இயல்பு பெற்றவர்களாக இருக்கிறார்கள். இதனால் இவர்களை மந்தமான குழந்தைகள் என்றோ அல்லது எதிலும் ஈடுபாடு இல்லாமல் தமது எண்ணப்படி இருப்பவர்கள் என்றோ சமுதாயம் புறக்கணிக்க முடியாது.

பெற்றவர்களும் சமுதாயமும் சற்றுக் கூடுதல் அக்கறை எடுத்து இவர்களைக் கவனித்து, அவர்களிற்கிடையில் ஒழிந்து கிடக்கும் தனித்திறமையைத் தட்டிக் கொடுப்பதன் மூலம் இவர்களை சமுதாயத்தில் தற்துணிவுடன் வாழ வைக்க முடியும். இவர்களுக்கு இருப்பது ஒரு அறிவு இறுக்கம். இவர்கள் உலகம் தனி உலகம். பெற்றோர்களே இவர்களுக்கு எல்லாம். அத்துடன், இவர்கள் பயன்படுத்தும் சாதாரணப் பொருட்கள்தான் இவர்களின் வாழ்க்கை. இவ் ஆட்டிசக் குறைபாட்டை 'ஸ்பெக்ட்ரம் டிஸ் ஆர்டர்' என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இவர்களை நூறுவீதம் குணப்படுத்த முடியாவிட்டாலும், சில தொடர் பயிற்சிகள் மூலமும், சில மருந்துகள் மூலமும் சீரான நிலைக்கு கொண்டு வர முடியும். சாதாரண குழந்தைகளை விட இவர்கள் கூடிய புலனுணர்வு கொண்டவர்கள் ஆதலால் தமது இடத்தைவிட்டு, வேறு இடங்களுக்கு செல்லும் போது, அந்த இடத்தின் சூழலை அசவுகரியமாக உணர்ந்து, அதற்கு எதிராக சமூகத்தை விட்டு ஒதுங்கி இருக்கின்றனர்.

சில பெற்றோர்கள் தமது குழந்தைகள் ஆட்டிசம் பாதிப்புக்குள்ளானதை அறிந்ததும் விரக்தி, பயம், திகைப்பு, இயலாமை என்று மனவருத்ததிற்கு ஆட்படுகின்றனர். இது இயல்பானதுதான். ஆனால், 'ஐயோ எனது பிள்ளை இப்படியாகி விட்டதே' என்று மனம் வருந்தி காலத்தை வீண்டிக்காமல், அவர்களுக்கு ஆதரவாக இருந்து அவர்கள் வளர்ச்சிக்கான அனைத்தையும் செய்து கொடுக்க வேண்டும். இக்குழந்தைகளினுள் ஒழிந்திருக்கும் திறமையும் மேதாவித்தனமும் உங்களை பிரமிக்க வைக்கும்.

குழந்தையின் நாளாந்த வாழ்க்கை முறையை இலகுவாக்கும் பயிற்சி,சமூக ஒருங்கிணைப்புப் பயிற்சி, சமூகத்துடனான தொடர்பாடல் முறை, பேச்சுப் பயிற்சி, எழுத்துப் பயிற்சி,சம வயதுக் குழந்தைகளுடன் ஒன்றித்துப் பழகும் பயிற்சியெனஎத்தனையோ உதவும் கரங்கள் இக் குழந்தைகளுக்காகவே உள்ளன. சரியான, குழந்தையின் மனதிற்குப் பிடித்த இடத்தை பெற்றவர்கள் தெரிவு செய்ய வேண்டும்.அடிப்படைக்பயிற்சிகளை வழங்க வேண்டும். ஊக்குவிப்பும் அன்பும் ஆதரவும் இந்தக் குழந்தைகளின் வாழ்வை பல மடங்கு மேம்படுத்தும். விஞ்ஞானி ஐன்ஸ்டீன், கணனி வல்லுனர் பில்கேட்ஸ், நடனக் கலைஞர் மைக்கல் ஜாக்சன் போன்றவர்களும் ஆட்டிசம் குறைபாட்டுடன்தான் சாதனையாளர்களாக உருவெடுத்தவர்கள் என்பதை அறியும்போது ஒரு நம்பிக்கை உருவாகிறது அல்லவா?

**இப்படியான குழந்தைகளில் தென்படும் மாற்றம் பெரும்பாலும் ஐந்து, ஆறு வயதிலேயே வெளித் தெரிகின்றது. இக் குழந்தைகளை சமூகத்தில் மற்றவர்களுடன் ஒன்ற வைப்பது என்பது மிகவும் கடினமான பணியே. இக் குழந்தைகளின் ஐம்புலன்களும் சாதாரண குழந்தைகளை விட பன்மடங்கு மேலானவை. நம் கண்ணுக்கு புலப்படாத வித்தியாசமான ஒரு பொருள் அல்லது காட்சி இக் குழந்தைகளுக்கு சிறப்பாக புலப்படும் என்கிறது அறிவியல்.**





மாலினி மோகன்

# மலையகத்தின் பெண்மணிகள்

இவ்வொரு வருடமும் மார்ச் 8ஆம் திகதி பெண்களின் பெருமை பேசும் நாளாகும்.நியுயோர்க் நகரில் 1857இல் மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆயிரக்கணக்கான வேலைப் பார்க்கும் பெண்கள் ஆண்களுக்கு நிகரான சம்பளம் வேண்டி போராட்டம் செய்து பொலீசாரால் ஓட விடப்பட்டனர். இன்னாளே பிற்காலங்களில் மகளிர்தினமாக கொண்டாடப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. இதனையடுத்து, 1921 இல் உலக மகளிர்தினம் கொண்டாடப்பட்டது. 1975 ஆம் ஆண்டு இந்நாளை சர்வதேச மகளிர் தினமாக ஐ.நா.சபை அறிவித்திருந்தது. பெண்களின் உரிமைக்காக குரல் கொடுக்க ஒரு மாதம், நாள் தேவைப்படுகின்றது என்றால் பெண்களுக்கான உரிமைகள் பற்றி அறிந்திருக்க தவறுகிறோமா?. ஆம் என்றால் அது தவறில்லை.

உரிமை என்பது உறுதி செய்யப்பட்ட சுதந்திரமாகும். இவ்வாறு உறுதி செய்யப்பட்ட சுதந்திரம் பற்றி எம்மில் பலரும் அறிந்திருக்க தவறுகிறோம். சுதந்திரம் என்ற பெயரில் வேறு எதையோ சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கிறோம். உண்மையாக, பெண்களின் உரிமைகள் பற்றி பெண்களை வலுப்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு மிகவும் கவனம் செலுத்தியுள்ளது. தேசிய மற்றும் சர்வதேச முன்னுரிமைகளுடன், பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தவும் ஆவனசெய்கிறது. மேலும் அபிவிருத்தியில் ஆண்களும் பெண்களும் சம பங்காளராக இருப்பதை உறுதி செய்ய பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை நீக்க உழைக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை.

இயற்கையியல் அறிஞர் சார்ல்ஸ் டார்வின் தியரியின் படி இவ்வுலகம் குரங்கிலிருந்து மனிதனாக பரிணாம வளர்ச்சி பெற்றதாக குறிப்பிடப்படுகிறது. ஆனாலும் அவ்வாறு வளர்ச்சியடைந்த மனித இனம் இன்று உலகையே தன் உள்ளங்கை ரேகைக்குள் பதுக்கி கொண்டு விஞ்ஞான அறிவியல் புரட்சியில் தொழில்நுட்பத்தை தன்வசப்படுத்தி விண்ணில் குடியேறி, அங்கும் தன் தடம் பதிக்க, நித்தம் தன்னை புதுப்பித்துக்கொண்டிருக்கிறது. இப்படியான இவ்வுலகில் உண்மையில் தன்னை ஓர் இயந்திரமாகவே மாற்றிக்கொண்டிக்கிறாள் பெண். ஆணாதிக்க சமூக கட்டமைக்குள் சிக்கி அடிமைப்படுத்தப்பட்ட பெண்ணினம் இன்று பேசுபொருளாக மாறி வருவதை மறுப்பாரில்லை. இது ஆணாதிக்க சமூகம் தான். ஆனாலும் பெண்களின் வளர்ச்சியில் முட்டுக்கட்டைகளாக பல பெண்களே காணப்படுவதும் கண்கூடு.. உதாரணமாக மாமியார்,நாத்தனார், பெண் அதிகாரிகளுக்கு கீழ் வேலை செய்யும் ஏனைய பெண்களின் நிலமை என்பனவற்றைக் குறிப்பிடலாம். மனிதனை படைக்கும் பெண் தெய்வமே பெண்தான். இவ்வுலகுக்கு குழந்தைகளை புதுவரவுகளாக்கி மிளிரும் பெண்ணுக்கு ஈடிணை இல்லை என ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் அவசியம் அறிந்திருந்தல் வேண்டும். எப்போதும் எம் சமூகத்தில் பெண்கள் முதன்மையானவர்களாக காணப்படுகின்றனர்.



# மலையகத்தின் பெண்மணிகள்



காரணம் உலக சனத் தொகையில் 49.5% மிக அதிகரித்துவரும் பெண்கள் தொகையாகும். இதில் இலங்கையில் ஆண்கள் 49.3% வீதமும் பெண்கள் 50.7% வீதமுமாகும். ஆண்களை விட பெண்கள் 1.4% அதிகமாகும். இதிலும் குறிப்பாக மலையகத்தில் ஆண்கள் தொகை 47.8% ஆகவும் பெண்கள் தொகை 52.2% ஆகவும் இருக்கிறது. இதுவே பெண்களின் முன்னேற்றத்திற்கான திறவுகோல்தான். இன்று உலகளவில் பெண்கள் விவசாயம், தொழிற்சாலை, ஏற்றுமதி, அழகியல்துறை, அரசியல், சமூகவலைதளம், விளையாட்டு, விண்வெளி, இராணுவம், சினிமா, காவல்துறை, கப்பல்துறை என எல்லா துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக நின்று ஈடுகொடுக்கின்றார்கள். மலையகத்தில் பெண்கள் பல துறைகளிலும் தனது பங்களிப்பை ஆற்ற தவறவில்லை அதற்கு பின்வருவன சான்று பகர்கின்றன.

மலையகத்தின் லபுக்கலையை சேர்ந்த சின்னக்கருப்பன் ஸ்ரீபவானி விளையாட்டுத்துறையில் சாதனை, அண்மையில் நடைபெற்ற மாகாணசபை தேர்தலில் அனுசியா சந்திரசேகரம் அரசியலில் தனி ஒரு பெண்ணாக 10000 வாக்குகளுக்கு மேல் பெற்று சாதனை, முன்னால் மத்தியமாகாண தமிழ்கல்வி அமைச்சரும், தற்போதய இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பிரதி தலைவருமான திருமதி. அனுசியா சிவராஜா அம்மையார் ஆண்களுக்கு நிகராக தன் பங்கை கல்வி, அரசியல் என இரு துறைகளிலும் தடம் பதித்துள்ளமை போன்றன. மேலும் தற்போதய மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி சத்யேந்திரா அம்மையார் , கல்வியமைச்சின் பெருந்தோட்டத்துறைக்கான முன்னாள் கல்விப்பணிப்பாளர் மகேஸ்வரி சபாரஞ்சன், நம்பொட அழகியல் கல்லூரியின் அதிபர் ஜே.டீ.வேதநாயகம் [ஆளுமை மிக்க வீரமங்கை] , காலஞ்சென்ற ஹட்டன் கல்வி வலயத்தின் முன்னாள் பணிப்பாளர் திருமதி . கணபதிபிள்ளை,கந்தப்பளை மெதடிஸ்ட் கல்லூரியின் முன்னாள் அதிபர் காலஞ்சென்ற திருமதி லக்ஷ்மி என பல மலையக பெண் மணிகள் கல்வித்துறையில் சாதித்தவர்கள். மேலும் கண்டியைச் சேர்ந்த நாகபூசணி கருப்பையா ஊடகவியல் துறையில் பல்வேறு பரிமாணங்களைப் பெற்ற பெண்மணியாக திகழ்கிறார்.

மேற்படி முக்கிய துறைகளில் பெண்கள் முன்னேறி இருப்பினும், பெண்களின் ஆற்றல்களை உச்சமாக பயன்படுத்துவதற்கு, தலைமைத்துவ பதவிகளில் பெண்களை அமர்த்துவதற்கு கலாசாரம் உட்பட பல்வேறு தடைகள் இன்னும் இருப்பதை தவிர்க்கமுடியாமல் உள்ளது. இதனாலேயே ஆண் தலைவர்களுக்கும், பெண் தலைவர்களுக்குமிடையே நடத்தையிலும், வினைதிறனிலும் வேறுபாடுகள் உள்ளனவா என மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வில், (Meta Anatysis) அறிவு, திறன் , மனப்பாங்கு தொடர்பாக ஆண், பெண் தலைமைத்துவத்திற்கு இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை என நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.

**“உரிமை என்பது உறுதி செய்யப்பட்ட சுதந்திரமாகும். இவ்வாறு உறுதி செய்யப்பட்ட சுதந்திரம் பற்றி எம்மில் பலரும் அறிந்திருக்க தவறுகிறோம். சுதந்திரம் என்ற பெயரில் வேறு எதையோ சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறோம். உண்மையாக, பெண்களின் உரிமைகள் பற்றி பெண்களை வலுப்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு மிகவும் கவனம் செலுத்தியுள்ளது. தேசிய மற்றும் சர்வதேச முன்னுரிமைகளுடன், பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தவும் ஆவனசெய்கிறது.”**



கனலி

# தேசத்தின் தூண்கள்!!

எரிபொருளுக்காக
ஏங்கி நிற்கும் வரிசையில்
மரணம்!!
அதே வரிசையிலேயே
பல ஜனனம்.!!
வீதியெங்கும் மக்கள் வெள்ளம்..
ஆர்ப்பாட்டங்கள் அழுகைகள்..
விண்ணப்பங்கள் விசனங்கள்
எல்லாமே..
உயிரைத் தக்கவைக்க
இன்று
நடக்கும் போராட்டங்கள்..


நெஞ்சம் கனக்கிறது!!
கண்மணிகளே!!
உயிர் வாழத் துடிக்கும்
மாந்தர் மத்தியில்
காலம் குறித்துக்
கையசைத்துப் போனீர்கள்!!
வாழும் வயதில்
காற்றிடை கலந்தீர்கள்!!

நீங்கள் இல்லாமலே
அடுத்த பொழுது விடியும்..
தெரிந்தும் புன்னகை மாறாமல்
போய்வருகிறோம் என்றீர்கள்
நாளாந்த வழக்கம் போல
நாளை செய்ய
வேண்டியதையும்
சொல்லிச் சென்றீர்கள்.!!

பொதியுடன்
போனவர்கள் பற்றிய
செய்தி மட்டுமே
திரும்பி வந்தது!!
உண்மை எதுவெனத் தெரிந்தும்
இன்று வருவீர்
நாளை வருவீர்
என்றாவது ஒருநாள்
எம்முன்னே வருவீர் என
காத்திருக்கிறோம்..
கண்மணிகளே!!
காத்துக் கொண்டே இருக்கி
றோம்.. இருப்போம்!

கந்தக வாடை நடுவில்
இன்னமும்
உங்கள் சுகந்த
வாசம் வீசுகிறது..
புன்னகைக்கும்
குழந்தைகள் முகங்களில்
உங்கள் ஜாடை தெரிகிறது.
மீண்டும் பிறப்பீர்..
மீள் பிறப்பெடுப்பீர்..!!
உங்கள் வீரம்!!
தன்னை எண்ணாது
தாயவளைக் காக்கும்
தற்துணிவு!!
தலைமையை
தாங்கிநிற்கும்
தீரம்..!!
நிதானம்!
தளம்பாத உறுதி!!
எங்களுக்கு என்றும்
வேண்டும்.

தேசத்தின் தூண்களே.!!
உங்கள் அர்ப்பணிப்பு..
மாதத்தில்
வரலாற்றில் நிகழாத
மக்கள் புரட்சி!!
உங்கள்
ஈகைக்கு அர்த்தம் உள்ளது!!
கண்மணிகளே.!!
சத்தியம் தோற்றுப்
போனதில்லை!!
காலம் கடந்தாலும்
வாய்மையே வெல்லும்..!!



கார்த்திகை



# ஆவி உலகிலிருந்து வேண்டுகிறேன்!!

பரமண்டலத்தில் இருக்கும்
எங்கள் பிதாவே!!
ஸ்தோத்திரம் தேவனே!
நவாலியில்
'புக்காரா' குண்டில் பரலோகம் போன
அப்பாவி ஆத்மாக்களில்
நானும் ஒருத்தி இன்னமும்
ஆவியாய் அலைகிறேன்!

கர்த்தரே!!
கண்டதையும் கேட்க
நானிங்கு வரவில்லை
புதிதாக
உம்மிடம் கேட்க
எனக்கென்ன இருக்கிறது?

1995 ஜூலை ஒன்பது
ஞாபகத்தில் வருகிறதா?
சென் பீட்டர்ஸ் தேவாலயம்!!!
புக்காரா குண்டடித்து
கொத்தாகக் கொன்றார்களே..!
அகதியாய் உம்மையும்
அலைய விட்ட அந்த நாள்.
மௌன சாட்சியமாய்
அனைத்தையும் பார்த்திருந்த
சிலுவை ஆண்டவரே.!!
உம் முன்னால்
கிழங்குகளாய்.
அடுக்கப்பட்டிருந்த
உடலங்களின் உரிமையாளர் - அந்த
147 பிரேத ஆத்மாக்கள்
சாட்சியமாய்க் கேட்கிறேன்..
நவாலிப் படுகொலைகளுக்கு
நீதி வேண்டும்!!!
கிடைக்குமா..எங்கள் தேவா..?

இருபத்தெட்டு வருடங்களாய்
அந்தரித்துக் கிடக்கிறேன்..
ஆண்டவரே..!!
பரலோக ராஜ்யத்திற்கு
அழைத்துச் செல்வீரென
பிறந்ததில் இருந்தே
திடமாய் நம்பினேன்
தேவாலயம்தான் எனக்கு
எல்லாமுமாக இருந்தது.

சிலுவையில் தொங்கிக்
கொண்டிருக்கும் பிதாவே..!!
நீர் கூறியது போல
பாவிகளையும் நான் மன்னித்து
வாழ்ந்தேன் எம்மை
துன்புறுத்தியவர்களுக்காகவும் சேர்த்து
நான் மன்றாடினேன்
அடக்குமுறைகளை எதிர்த்ததால் - நீர்
சிலுவை சுமந்தீர்
எதுவுமே செய்யாத எமக்கு
ஏனிந்தத் தண்டனை??

பாதுகாப்பிடத்திற்கு நகருங்கள் - என்ற
கட்டளை கேட்டு
உம்மைத்தானே விசுவாசமாய்த்
தேடிவந்தோம்.??
உங்கள் தலையிலேயே குண்டு போட
எப்படி நீர் அனுமதித்தீர்??
வயோதிபர் வாலிபர்.. குழந்தைகள்
அத்தனை பேரும்
உம் முன்னால் மண்டியிட்ட
மானிடர்தானே..!
அன்று
கண்முன்னே என் குழந்தை
காணாமல் போனதனை
கண்டும் செயலிழந்து கிடந்த
பாவி நான்..!!

வாழ்க்கை என்றால் என்னவென்று
தெரிவதற்கு முன்னாலே
சிதறுண்டு போன
இந்த மானிடர்
கூட்டம்
செய்த பாவம்தான் என்ன.?
கொலைவெறியாடிய பாதகர்க்கு
தண்டனை எதுவும் கிடையாதா?
எங்களுக்கு நியாயம் கிடைக்க
வழி செய்ய மாட்டீரா?

இந்தப் பாவிகளின்
நிறைவேறா ஆசையைத்
தீர்த்துவைத்து
பாவிகள் எங்களை
இரட்சிக்கக் கூடாதா?

ஆவியுலகிலும் எங்களுக்கிங்கு
நிம்மதி ஏதும் கிடைத்தபாடில்லை
சுடு காடாய்ப்போன
எங்கள் தேசத்தின்
இடுகாட்டு நிலத்தையும்- திருட
அரசமரக் கன்றுடன்
காத்துக் கிடக்கிறது இந்த
இனவெறிக் கூட்டம்.
அமைதியின்றி அலைகிறோம்
பிதாவே.!!
எப்போது எங்களுக்கு
பாவ விமோசனம்?
தவறுதலாய் இடம்பெற்ற
குண்டுவீச்சு - என்று
சர்வசாதாரணமாய்
'சந்திரிகா' விடும் அறிக்கை
போன உயிர்களைக்
கொண்டுவந்து சேர்த்திடுமா..??
இன்றும் பரிதவிக்கும்
உற்றார் உறவினரின்
அவலத்தைத் துடைத்திடுமா..??

உம்மையே
இடம் பெயரவைத்த
கொலைகாரப் பாவிகளை
ஒருமுறையாவது
தண்டியும்.. கண்டியும்.
உமது மகிமையை
எமக்குத் தாரும்!
இறப்பிலாவது எமக்கு
சந்தோசம் தாரும்!
ஆண்டவரே! - இந்த
ஆவிகளை இரட்சியும்..!!



## பொதுப் போக்குவரத்துகளில்

# பெண்கள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்கள்

சமூக ஊடகங்களிலும் சரி, பொது இடங்களிலும் சரி, ஆண், பெண் தொடர்பான பால் நிலை சமத்துவம் தொடர்பில் அதிகளவான கருத்துக்களை வாய் கிழிய பேசிக்கொள்வோம். ஆனால் பெண்கள் பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்யும் போது மட்டும் இந்த வியாக்கியானங்கள் எடுபடுவதில்லை. காரணம் பெண்கள் பொது பிரயாணங்களின் போது, நாளாந்தம் ஏற்படும் கசப்பான அனுபவங்களையே எதிர்கொள்கின்றனர்.

இன்றைய வானளாவிய ரீதியில் அதிகரித்துச் செல்லும் இந்த காலத்தில் ஆண், பெண் என இருவரும் வருமானமீட்டும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். அதேபோல வேலைக்குச் செல்லும் பெண்களும் அதிகளவில் காணப்படுகின்றனர். பொருளாதாரக் கொள்கைகளும் ஆண்கள் போலவே பெண்களுக்கும் வருமானமீட்ட வேண்டிய தேவைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள்.

விடியற்காலை ஐந்து மணி தொடக்கம் ஒன்பது மணி வரை தலைநகர் வீதிகளில் ஓட்டமும் நடையுமாக விரைந்து செல்லும் மக்கள் திரளில் சரிக்குச் சரிபாதி பெண்கள் என்பதை அன்றாடம் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

இன்று அதிகளவான பெண்கள் பொதுப் போக்குவரத்தையே மேற்கொள்கின்றனர். இலங்கை போன்ற சிறிய நாடுகளில் பெண்களுக்கு என்று விசேட பேருந்து சேவைகளோ அல்லது தனிப்பட்ட பஸ் சேவைகளோ இல்லை.

பஸ், ரயில் போன்ற சேவைகளில் அதிகளவாக பெண்கள் தங்களது போக்குவரத்தை முன்னெடுத்து வருகின்றனர். அதற்கமைய பாலியல் சுரண்டல்களையும் போக்குவரத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் கண்டும் காணமலும் கடந்து போகின்றார்கள்.

பெண்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளை ஊடகங்கள் வாயிலாக நாம் எழுதினாலும் இன்று வரை அதற்கு தீர்வின்றி தொடர்ந்து





கொண்டே தான் இருக்கின்றது. அதேபோலத்தான் இன்றைய படித்த சமூகத்தினருக்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுகளால் இவ்வாறான பிரச்சினைகள் பெரும்பாலும் ஏற்படுவதில்லை.

எனினும் வயது போன, நடுத்தர வயதுடைய ஆண்களாலே இவ்வாறான பாலியல் சுரண்டல்களுக்கு பெண்கள் இலக்காகப்படுகின்றார்கள் என்ற பொதுவான கருத்துண்டு.

அதற்கமைய வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு தினமும் தனியாகப் பிரயாணம் செய்யும் போது பாலியல் ரீதியான வன்முறைகளை நிறையவே எதிர்கொள்கிறேன் என தனது அனுபவங்களை பகிர்ந்துகொண்டார் சட்டக்கல்லூரி மாணவியான நிவேதிதா கனகசபை.

நான் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு தினமும் தனியாக சென்று வருகின்றேன். இதனால் நான் அடிக்கடி பாதுகாப்பின்மையை உணர்ந்துள்ளேன். பெரும்பாலான ஆண்களுக்குப் பேருந்துகளில் எப்படி அமர்வது என்று சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. பக்கத்தில் இருக்கும் பெண்களை தீண்டுகிறோம் அல்லது துன்புறுத்துகிறோம் என்ற எந்த உணர்வும் இல்லாதவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் நெருக்கடிகளை தமக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார்கள் என கூறுகின்றார்.

இதனடையே என்னுடைய பெரும்பாலான ரயில் பயணங்கள் மோசமான அனுபவங்களையே எனக்கு கொடுத்துள்ளன என பல்கலைக்கழக மாணவியான பிரஷா பாலக்கிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

உயர்கல்விக்காக இரவு நேரங்களிலேயே கொழும்புக்குப் பயணம் செய்ய வேண்டிய நிலைமை காணப்படுகிறது. இந்த நேரத்தில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். பிரயாணம் செய்யும்போது பாலியல் ரீதியான வன்முறைகளை எதிர்கொள்கிறேன் என்கிறார். பயணங்களின் போது, பல சந்தர்ப்பங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை கண்டும் காணாமலும் இருப்பவர்கள் தான் அதிகமாக இருக்கின்றார்கள். பேருந்து நடத்துனர்கள் இவ்விடயத்தில் அக்கறை காட்ட வேண்டும். ஒரு சில நடத்துனர்களே சமூக அக்கறையுடன் செயற்படுகிறார்கள்.

முதுகெலும்புள்ள நபர்கள் தவறுகளைத் தட்டிக் கேட்க வேண்டும். சில பேருந்து நடத்துனர்களும் இவ்வாறான வன்முறைகளை மேற்கொள்வதாகப் பெண்ணொருவரும் குறிப்பிடுகிறார்.

பாடசாலை மாணவியாக இருந்த காலத்தில் தினமும் பாடசாலைக்குச் செல்லும் போது தான் இதுபோன்ற வன்முறைகளை எதிர்கொண்டதாகவும் இதுபோன்ற துஷ்பிரயோகங்களை எப்படி கையாள்வது என்று தனக்குத் தெரிந்திருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

8 வருடங்களுக்கு மேலாக பஸ் நடத்துனராக கடமையாற்றுகின்றேன். பஸ் பயணங்களின் போது பெண்கள் சில பிரச்சினைகளை எதிர்கொள்வதை நான் பார்த்துள்ளேன்.

எனினும் பெண்கள் இது தொடர்பான பிரச்சினைகளை என்னிடமோ அல்லது வேறு யாரிடமோ சொல்வதற்கு தயங்குகின்றார்கள். உடனடியாக அவ்விடத்தை விட்டு நகர்ந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதை நான் பார்த்துள்ளேன். அதுமட்டுமல்லாது தற்போது, இளைஞர்களை விட நடுத்தர வயது ஆண்களாலேயே தான் அதிகம் பாலியல் ரீதியான சீண்டல்களில் ஈடுபடுகின்றனர்.

ஆண்கள் தமக்குப் பரிட்சயம் அற்ற பெண்களிடமே தமது தகாத செயல்களை அரங்கேற்றுவதாகவும் இது தொடர்பாக நான் பலமுறை சில ஆண்களிடம் எச்சரித்துள்ளாகவும் அவர் தன்னுடைய அனுபவத்தை கூறினார்.

அதுமட்டுமில்லாமல் பாடசாலைக் காலங்களில் மாணவிகளே அதிகம் பஸ்ஸில் ஏறுகின்றார்கள். அப்படியிருக்கையில், சன நெரிசல்களின் போதும் இது போன்ற பாலியல் தொந்தரவுகள் ஏற்படுகின்றன. எனினும்

**வெளி மாவட்டங்களில் பணிபுரியும் பெண்கள், நாளாந்தம் பொதுப் போக்குவரத்துக்களில் தொழிலுக்குச் செல்கின்ற பெண்கள் மற்றும் பல் கலைக்கழக மாணவிகள் போன்றோரிடம் கேட்கும் போது, தம்முடன் பிரயாணம் செய்யும் பெண்களை மதிக்கத் தெரியாத சமூகத்தில்தான் நாம் வாழ்கின்றோம். பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விழிப்புணர்வு அவசியம். இவ்வாறான பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடும் குற்றவாளிகளை அடையாளம் கண்டு தண்டனை வழங்க அனைவரும் முன்வரவேண்டும். அத்துடன், பொதுப்போக்குவரத்துச் சேவைகளைப் பெண்களுக்குப் எவ்வாறு பாதுகாப்பானதாக மாற்றுவது எப்படி என்பது தொடர்பில் அனைவரும் சிந்திக்கவேண்டியது அவசியம்.**





**இலங்கையைப் பொறுத்தவரையில் பொதுப் போக்குவரத்தில் அதிகமாக பஸ் மற்றும் புகையிரதங்களே காணப்படுகின்றன. அதில் பயணிக்கும் 90 சதவீதமானவர்கள் பெண்களும், சிறுமிகளுமே.**

**குறிப்பாக அவர்களே அதிகமாக பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் சொற்ப அளவானோர் மாத்திரமே பொலிஸாரிடம் உதவி வேண்டுகின்றார்கள். அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் 15–35 வயதுக்கு உட்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகள், பாடசாலை மாணவிகள் இந்த பாதிப்புகளுக்கு முகம்கொடுக்கின்றனர்.**

இதை அவர்கள் கண்டும் காணதது போலத் தான் கடந்து செல்கின்றார்கள் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பொதுப் போக்குவரத்தில் அதிகமாக பஸ் மற்றும் புகையிரதங்களே காணப்படுகின்றன. அதில் பயணிக்கும் 90 சதவீதமானவர்கள் பெண்களும், சிறுமிகளுமே.

குறிப்பாக அவர்களே அதிகமாக பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் சொற்ப அளவானோர் மாத்திரமே பொலிஸாரிடம் உதவி வேண்டுகின்றார்கள். அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் 15-35 வயதுக்கு உட்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகள், பாடசாலை மாணவிகள் இந்த பாதிப்புகளுக்கு முகம்கொடுக்கின்றனர்.

இந்த சமூகப் பிரச்சினைக்கான தீர்வுகாண்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் ஒரு வடிவமாகும்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினையை பரந்த மட்டத்தில் எதிர்கொள்வதற்கு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்புக்கான தரவுகளை நாம் நாடளாவிய ரீதியில் சேகரிக்க வேண்டும். போக்குவரத்தில் பாலியல் ரீதியான சீண்டல்கள் பரவலாக பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை ஒன்றாகும்.

ஒவ்வொருவரும் அசௌகரியமில்லாமல் பொதுச்சேவைகளை உபயோகிக்கும் உரித்துள்ளவர்கள். பொதுப்போக்குவரத்தில் பாலியல் சீண்டல்கள் முற்றாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தே இருக்க முடியாது.

இதனை தடுத்து நிறுத்துவதற்கு பல மட்டங்களில் இருந்தும் ஒத்துழைப்புத் தேவை. பரவலாகவும் காலம் காலமாகவும் பெண்கள் பொதுபோக்குவரத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் பல வேலைத்திட்டங்களும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் மூலம் முன்னெடுக்கப்பட்டாலும் இது வரையிலான முன்னேற்றமான தீர்வுகள் இடம்பெறவில்லை என்பதும் கசப்பான உண்மையாகும். அதேபோல வெளி மாவட்டங்களில் பணிபுரியும் பெண்கள், நாளாந்தம் பொதுப் போக்குவரத்துக்களில் தொழிலுக்குச் செல்கின்ற பெண்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவிகள் போன்றோரிடம் கேட்கும் போது, தம்முடன் பிரயாணம் செய்யும் பெண்களை மதிக்கத் தெரியாத சமூகத்தில்தான் நாம் வாழ்கின்றோம். பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விழிப்புணர்வு அவசியம்.

இவ்வாறான பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடும் குற்றவாளிகளை அடையாளம் கண்டு தண்டனை வழங்க அனைவரும் முன்வரவேண்டும். அத்துடன், பொதுப்போக்குவரத்துச் சேவைகளைப் பெண்களுக்கு எவ்வாறு பாதுகாப்பானதாக மாற்றுவது எப்படி என்பது தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டியது அவசியம்.

இந்த உலகத்தில் உள்ளவர்களின் துன்பங்களிற்குக் காரணம் வன்முறையாளர்கள் மாத்திரமல்ல வன்முறைகளை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்கும் சில பேர்களும் தான். பெண்கள் அன்றாட பயணங்களின் போதும் வார இறுதி நாட்களில் சொந்த ஊர்களுக்குப் பயணிக்கும் போதும், மேற்படிப்பிற்காக கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற நகரங்களுக்குப் பயணிக்கும் போதும் இவ்வாறான சவால்களைச் சந்திப்பதாகக் குறிப்பிட்டனர்.

இவ்வாறான பாலியல் ரீதியான அத்துமீறல்கள் பெண்களின் பயணங்களை நரகமாக்கிக் கொண்டிருப்பதுடன் அவற்றை மட்டுப்படுத்துகின்றன. இன்றைய காலகட்டத்தில் துவிச்சக்கரவண்டிகளைத் தாண்டி, பெண்கள் பேருந்து, முச்சக்கரவண்டி, மோட்டார் வண்டிகள், என ஆண்களுக்கு மட்டுமே என உரித்தான பல வாகனங்களை புறந்தள்ளி ஓட்ட பழகிக்கொண்டுள்ளார்கள். கால மாற்றத்தின் போது, பெண்களை தங்களது இயல்பாக வெளியே பல சவால்களை எதிர்நோக்க வேண்டி உந்திக்கொண்டு இருக்கிறது.

அச் சவால்களை எதிர்கொண்டு வாழ்க்கையை வெற்றிகொள்ள வேண்டிய கட்டாயத்தில் நவீன மற்றும் முற்போக்கான பெண்கள் எத்தனிக்கும் இவ்வேளையில், போக்குவரத்து என்கின்ற தடைகள் பெண்களுக்கு சுமையாக இருப்பது நல்லதல்ல.

அதேபோல தற்காலத்தில் பெண்களின் போக்குவரத்து விதிகள் புதிய பரிணாமத்தை எட்டியிருக்கும் அதேவேளை எதிர்கால சந்தியினருக்கும் பொது போக்குவரத்தில் ஏற்படக்கூடிய பாலியல் சுரண்டல்களிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்வதையும் அவர்கள் அறிந்திருக்கின்றார்கள் என்பதும் தற்காலிக மகிழ்ச்சியாகும்.

# இதுவும் ஒரு கோடை விடிகாலை

மிதயா கானவி

சிட்டுக் குருவிகளின்
சின்னச் சின்ன
சீண்டல்கள்
இங்கில்லை!
காகம் கரையும்
காலையுமில்லை!

கதிரவன் என்னை
எழுப்பவுமில்லை!
வண்ணத்துப் பூச்சிகளின்
வர்ணங்களையும் காணோம்!
சேவல் கூவலும்
சில் வண்டுகளின்
ரீங்காரமும்
வாடைக் காற்றும்
பாண் வண்டிகளின்
பரபரப்பும் ..
வாசல் வரவில்லை!!

அதிகாலை மனம்
வருடும்
பிள்ளையார் கோவிலின்
விடாத மணி ஒலியும்
அக்கம் பக்கம் -வீட்டாரின்
முணு முணுப்புகளும்
இடஞ்சல் தரவில்லை..!
படுக்கை அறைவரை
பரவி கிடக்கும்
அம்மா வின் தேநீர்
வாசமும்
வெள்ளைச்சியின்
சாணி நாற்றமும்
முல்லை விரிதலும்
மல்லிகை சிரிப்பதும்
எதுவுமேயில்லாமல்...

ஒற்றை
அலாரம் ஒலியுடன்
விடியும் இந்த
காலைக்கு பழக்கப்படுவது
அவ்வளவு
இலகுவானதேயில்லை ...

காற்று முத்தமிட
மறந்த மரங்களும்
சல சலக்க
தயங்கும்
நீரோடைகளும்
மணம் தரா
மலர்களும்
இங்கும் தான்...

இலத்திரன்
கம்பிகளில்
தொங்கி கொண்டே
இடை விடாமல்
ஓடிக் கொண்டிருக்கும்
வண்டிகளைப்
போலவே இந்த
மனிதர்களின்
விடிகாலையும்..!!

வழித்.(வாழ்க்கை)
துணைக்கு
வளர்ப்பு நாயுடன்
வலம் வரும்
அனாதை
மனிதர்களின்
ஏக்கம் நிறைந்த
விழிகளில்
தினம் தினம்
விடியும் இந்த நாட்கள்
ஏனோ
வாழ்வின்
பிடிமானங்களை
தொலைத்து
அலைக்கழிக்கின்றது ...!!

தூரத்தில் தெரியும்
அவர்களின்
மெல்லிய புன்னகை
பிடிக்காத இந்த
விடியலையும்
கனதியாக்கி போகிறது....!!

எழுந்து நடக்கின்றேன்...
பிடிக்காத இந்த விடியலிலும்
பிடித்தமானவர்களிற்காய்...!

கொற்றவை



# பொழுது விடியாதா?

மேற்குப் பக்கமாக, வாசிகசாலைப் பக்கம் போகும் ஒழுங்கையும் குஞ்சம்மா கடையடியிலிருந்து வரும் குச்சொழுங்கையும், தென் கிழக்கில் பொதுக் கிணத்தடிக்குப் போகும் பாதையும் சந்திக்கும் முக்கில், வடக்குப்புறம் பார்த்த வீடுதான் பத்மாவதியுடையது.

வீடு என்றால் ஆடம்பரமாக எதுவுமில்லை. வெளிநாட்டுப் பகட்டு எதுவும் தொடாத சாதாரண ஓட்டு வீடு.

முன்பக்கம் முழுவதும் கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில் ரோசாக்களும், செவ்வந்தியும், எக்சோறாக்களும், கத்தரிப்பூ நிறத்தில் சங்குப் பூவும், விதம் விதமான செவ்வரத்தைகளும், அந்தச் சூழலையே சுகந்தமாக்கும் மல்லிகை, முல்லை, நந்தியாவட்டை,இருவாட்சி, இன்னும் என்னென்னவோ பெயர் தெரியாத பூங்கன்றுகளும் குரோட்டன் செடிகளுமாக அந்த இடம் ரம்மியமாகக் காட்சியளிக்கும்.வளவின் எஞ்சிய பகுதி முழுவதிலும் மா, பலா, வாழை, தென்னை, கமுகு, எலுமிச்சை, மாதுளை, நெல்லி, கொய்யா என்று வைத்து பச்சைப் பசேலென்று கண்ணுக்கும் மனதுக்கும் குளிர்மையாக இருக்கும்.

அதிகாலையிலேயே எழும்பி வீட்டு வேலைகளை முடித்து, குளித்து தயாராகிவிட்டாள் பத்மாவதி என்ற, பத்மா என்று எல்லோருக்கும் தெரிந்த, இப்போது 'பத்து ரீச்சர்'ஆக மாறிய பத்மா. நேரம் காலை ஐந்தைத் தாண்டிவிட்டது. பொழுது புலர்ந்தும் புலராத நேரம். சைக்கிளைத் தள்ளியவாறு கேற்றைத் திறந்தாள் பத்து.

கிரீச்சிட்டு அழுதது கேற். கொஞ்சம் எண்ணை போடச்சொல்லி அப்பாட்டைச் சொல்ல வேணும். கையோட, கறள் கட்டமுதல், தகரத்துக்கும் பெயின்ற் அடிக்க வேணும்.

நாகரீகமான இரும்புக் கேற்தான். ஆனால், பாதுகாப்புக்காகவும், போய் வருபவர்கள் கண்ணில் விழுந்து எழும்பாமல் இருக்கவும் கேற்றில் தகரப் படல் அடிக்கப் பட்டிருக்கிறது.

ஒழுங்கை ஆள் அரவமில்லாமல் நிசப்தமாக இருந்தது. இடதுபுற வேலிகளில் இருந்த சீர்மைக்கிளுவை மரங்களும், வலதுபுறமாக இருந்த பூவரச மரங்களும் சடைத்து வளர்ந்து ஒழுங்கையின் மேல் விதானம் ஆகாயத்தைப் பார்க்க முடியாதவாறு மறைத்தன.

சிலுசிலுவென்று வீசிய இதமான காற்றும், ஆளரவமற்ற அமைதியும், பறவைகளின் கீச்சொலியும் மனதை அள்ள, துரிதமாக அந்த இடத்தைக் கடந்து போக மனது வரவில்லை. சற்று தூரம் சைக்கிளைத் தள்ளியவாறே இயற்கையை ரசித்தவாறு நடந்தாள் பத்து. மனதில் என்னென்னவோ எண்ணங்கள் வந்து போயின. கறவை மாடொன்று எங்கோ 'அம்மா!' என்று குரலெழுப்பியது.

இன்னும் கொஞ்சத்தூரம் போனால் இப்படியான இயற்கையழகைக் காண முடியாது. எல்லாமே புதுப்பணக்காரர் வீடுகள். புதிது புதிதாக முளைத்த அழகழகான மாடி வீடுகள், பங்களாக்கள் வண்ண வண்ணப் பூச்சுப் பூசிய சுற்று மதில்களும், கேற்றுக்கருகில் விதானமும், திண்ணையும் கூடிய புது மாதிரியான அமைப்பும், உள்ளே வீடுவரை சலவைக்கல்லில் இழைத்த தரையும், பெரிய பெரிய தொட்டிகளில் வைக்கப்பட்டிருக்கும் அழகழகான பூமரங்களுமாக. அப்பப்பா இப்படியான வீடுகளை அவள் படங்களில்தான் பார்த்திருக்கிறாள்.

நாடு எப்படித்தான் மாறிப்போய்விட்டது? முன்பெல்லாம் இந்த இடத்தில் குடிசை வீடுகளும், சின்னச் சின்ன வீடுகளும்தான் இருந்தன. நண்டும் சிண்டுமாக பிள்ளைகள் விளையாடிக் கொண்டு இருப்பார்கள்.

இந்தப் பகுதி எப்போதும் கூச்சலும் ஆரவாரமுமாக கலகலவென்று இருக்கும். இந்த வீதி நெடுகிலும்வெட்டையும், பற்றைகளும், கலட்டிகளுமாக பண்படுத்தப்படாத நிலங்களாகத்தான் இருந்தன.

ஆடு, மாடுகளை மேயக் கட்டியிருப்பார்கள். இப்போது குழந்தைகள் என்று யாரையும் தெருவில் பார்க்க முடிவதில்லை. அவர்களும் ரிவியும், 'ஒன்லைன்' விளையாட்டும், மொபைல் போனில் அரட்டையும் என்று எப்போதும் 'பிஸி'யாக இருப்பார்கள்.

வெளிநாட்டுப் பணமும், அந்நிய நாட்டுத் தொடர்பும், ஏன் வயோதிபர்கள்கூட அடிக்கடி பிள்ளைகளைப் பார்க்கவென்று வெளிநாடு போய் வருவதும் மனிதர்களையும், அவர்களின் பழக்க வழக்கங்களையும், வாழும் சூழலையும் அடியோடு மாற்றி விட்டன.

பழசை அசைபோட்டவாறு சைக்கிளை மிதித்ததில் மூன்று மைல்தூரத்தைக் கடந்து வந்தாயிற்று. போகவேண்டிய இடம் வந்துவிட்டது. சைக்கிளால் இறங்கி கேற்றைத் திறப்பதற்கிடையில் சரசக்கா கேற்றைத் திறந்தா. வீட்டுக்கும் கேற்றுக்குமாக நடையாய் நடந்திருப்பா போல. தேவையற்ற பதற்றம் இன்னமும் முகத்தில் ஒட்டிக் கொண்டிருந்தது. பட்டுப் புடவையிலும் அணிந்திருந்த கொள்ளை நகைகளிலும் அழகாக ஜொலித்தா அவ.



''எங்க வராம விட்டிடுவியோ எண்டு பயந்து போனன்.''



# பொழுது விடியாதா?

முன்னால் விறுவிறுவென்று வீடு நோக்கி நடந்தவவின் பின்னால் சைக்கிளைத் தள்ளிய வாறு பத்மா. பின் கொய்யகம் விட்ட சேலையு டன்கடகத்தை இடுப்பில் வைத்து அரக்கப்பறக்க தோட்டத்துக்கு ஓடும் முன்பிருந்த சரசக்காவின் உருவம் ஏனோ சட்டென்று ஞாபகத்துக்கு வந்த து.நாலு பிள்ளைகளும் வெளிநாட்டில்.

புதிதாகக் கட்டிய மாளிகையில் அம்மாவை அமர்த்தி அழகு பார்க்கிறார்கள். வீட்டுக்குக்கா வலும் ஆயிற்று. பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் அக்கா புடவைகளாகவும் நகைகளாகவும் வாங்கி அடுக்கியிருக்கிறா.

‘‘என்ன இண்டைக்கு பேந்தப் பேந்த முளிச் சுக்கொண்டு நிக்கிறாய்? அம்மா அந்த றூமில இருக்கிறா. நீ வந்துதான் பாத்ரூமுக்கு கொண்டு போக வேணுமாம்.... போ....! கூட்டிக்கொண்டு போ!’’

ஃபிரிஜில் இருந்த மல்லிகைச் சரத்தை எடுத் துகொண்டையில் செருகியவாறு சொன்னா சரசக்கா.

‘‘சிலவேளை வரப் பிந்தும்.... வேலையளை முடிச்சிட்டு, உனக்கு ஒரு சோறும் வடிச்சு கறியும் வைச்சிடு. சாமானுகள் எங்கெங்கை கிடக்கெண்டு தெரியுந்தானை....?அம்மாவுக்கு எப்பன் புளிக்கஞ்சி காச்சிக்குடு.... வாய்க்கு ருசியா எப்பன் இதம்பதமா வேணுமெண் டவா.... நீங்கள் வெளிக்கிட்டிட்டியளே...! பின்னை போய் ஏறுங்கோவன், கதவைப் பூட்டி வைச்சிரு...., அம்மாவைத் தனிய விடாதை....’’

சரசக்கா அங்கையும் இங்கையுமாகப் பரபரத் தபடி உத்தரவுகளைக் கொடுத்தா. பொன்னுச் சாமி அண்ணர் முந்தியே ஒரு வாயில்லாப் பூச்சி.

சரசக்காவின் வல்லமையில்தான் குடும்பம் ஓடியது. அம்மாவின் சொல்பேச்சுத் தட்டாத பிள்ளையள். எல்லாரும் வெளியாலபோன பிறகு சரசக்காவின் மதிப்பு மிகவும் உயர்ந்து விட்டது. அண்ணர் மறுபேச்சுப் பேசாமல் போய் காரில் ஏறிக்கொண்டார். கடைசிமுறையாக கண்ணாடிமுன் நின்று ஒரு ‘ஃபைனல் ரச் அப்’ கொடுத்தபின் சரசக்காவும் காரில் ஏறினா. ஓட்டுனர் பூப்போல அலுங்காமல் குலுங்காமல் காரை எடுத்தார். சலவைக்கற்களின் மீது ஓடி கேற்றைத் தாண்டி மறைந்தது கார்.

காலையில் வந்து பார்வதி ஆச்சியைக் கவ னிக்கும் வேலையையும் சேர்த்துச் செய்கிறாள் பத்து. இப்போதெல்லாம் முதியவர்களாகிவிட்ட பெற்றவர்களை பிள்ளைகள் தாங்களே கவனித் துக் கொள்வது அருகி விட்டது. காசு இருந்தால் எல்லாமே நடக்கும்.

ஆச்சியின் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்தபின் ஒரு குட்டிச் சமையல். அதுவும் முடிந்தபின் செய்வதற்குப் பெரிதாக வேலை ஒன்றுமில்லை. இத்தனை பெரிய வீடு சத்தம் சலார் எதுவுமின்றி அமைதியோவென்று இருந்தது. பத்துவுக்கு அமைதி பிடிக்கும்தான்.... அது இப்படியான ஒரு நிசப்தமல்ல.தனது வீட்டின் பின் வளவில், பச்சைப்பசேலென்ற மரங்களின் கீழ் கதிரையில் அமர்ந்து, குருவி களின் கீச்சொலிகளையும் இளங்காற்றையும் அனுபவித்தபடி புதுமைப்பித்தன் கதைகள்



படிப்பது மிகவும் பிடிக்கும். அதிலும் அப்போது மழைத்துளிகளும் விழுந்தால்....? அதிலிருந்து எழும் மண்வாசம், அடடா..,,!! அதற்கு எதுவுமே ஈடாகாது.

பிந்தி வருவோம் என்றவர்கள் நேரத்திற்கே வந்து விட்டார்கள். அத்துடன் ஆச்சியைப் பராமரிக்கும் அன்றைய வேலை முடிந்தது. மறுபடியும் வீடு நோக்கிய பயணம். குறுக்குப் பாதையால் போவது என்று தீர்மானித்தாள் பத்து. விரைவாக வீடு போய்ச் சேரவேண்டும் என்ற எண்ணத்தினால் அல்ல. முடிந்தவரை எங்கள் மண்ணின் எல்லாப் பகுதிகளையும் பார்க்கவேண்டும் என்ற அடிமனத்து ஆசைதான் அதற்குக் காரணம். வழியில் தெரிந்தவர்கள் இருவர் எதிர்ப்பட்டனர்.

‘‘என்ன பத்து ரீச்சர்! பாறுவதி ஆச்சியைப் பாத்திட்டு வாறியள் போல...’’

‘‘ஓமக்கா...! வேலை முடிஞ்சுது. வீட்டை போறன்...’’

மரியாதையாக, சைக்கிளில இருந்து இறங்கியவாறு, சொன்னாள் பத்து.

மீண்டும் சைக்கிளில் ஏறி உழக்க முன்பே சத்தமாக அவர்கள் பேசிய இரகசியம் காதில் விழுந்தது.

‘‘இவளுக்கென்ன..!! பிள்ளையோ குட்டியோ...? கலியாணமும் கட்டேல்ல. ரியூசன் குடுக்கிறது காணா தெண்டு இப்பிடி கிழடுகளைப் பராம ரிக்கிற வேலையும் செய்து உழைக்கி றாள்.... போற போற இடங்களிலயே சாப்பாடும் கிடைச்சிடும்.... தேப்பன் காரனும் விட்டிட்டு இருக்கிறான்....’’

மற்றவா ஏங்கிப்போனா. எனக் குத் தெரியாதது இவவுக்குத் தெரிந் திருக்கே என்று.

‘‘ மெய்யே,,,,,!! அப்ப உவ முதிர் கன்னியே!! பின்ன, உந்தக் காசை என்ன செய்யிறாவாம்...?

‘‘ஏதோ ‘சரிட்டி’யாம். கஸ்ரப்படுற புள்ளையளை தன்ரை செலவிலை படிப்பிக்கிறாளாம். பெண்டுகளா இருந்து கஸ்டப்படுகிற குடும்பங்க ளுக்கும் உதவுறாளாம். அதோட...’’ குரலை இன்னும் கொஞ்சம் தழைத்து...

‘‘உவவைப் போல... வேற... ஏலா தாக்களும் இருக்கினம் தானே? அவைக்கும் குடுக்கிறாள் எண்டு கேள்வி...’’

அவர்களின் குரல்கள் தேய்ந்து மறைந்தன.

பத்மாவுக்கு இவையெல்லாம் புதி தில்லை. இளமைக்காலத்தில் பத்துவும் கனவுகள் கண்டிருக்கிறாள். ராஜகுமா ரனைக் கல்யாணம் செய்துகொண்டு மாளிகையில் ‘செற்றில்’ ஆவதுபோல. அந்த வயதிற்கேயுரிய..., வாயிற்கும் வயிற்றுக்குமாக வாழும் மத்தியதரக் குடும்பத்திலுள்ள இளம் பெண்கள் காணும் கனவு. யதார்த்தம் வேறாக இருந்தது. நன்றாகப் படிக்கக் கூடிய வள் பத்து. சாதாரண தோட்டக்காரனாக இருந்தாலும் பரந்த சிந்தனை கொண்ட வர் அவளது தந்தை. பத்துவுக்கு புத்தக வாசிப்பை அறிமுகம் செய்து வைத்த தும் ஊக்குவித்ததும் அவர்தான்.

ஆண்கள் மட்டுமே புழங்கும் ஊர் வாசிகசாலையின் அத்தனை புத்தகங் களையும் பத்து வாசித்துத் தள்ளக் காரணமானவரும் அவர்தான். நேர காலம் பார்க்காமல் ஓடியோடி புத்த கங்களை எடுத்து வந்து கொடுப்பார். என்னத்தைப் படித்து என்ன? இடப் பெயர்வுகளும், மூலகாரணியான தரப் படுத்தலும் பல்கலைக்கழக கனவுக்கு ஆப்பு வைத்தன.

கற்றறிவும் பட்டறிவும் சேர்ந்து சமூகப் பிரச்சனைகளையும் நாட்டு நிலவரத்தையும் தெளிவாகப் புரிய வைத்தபோது,சமூக மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும் என்ற பிரக்ஞை யுடன் தனக்கான பாதையைப் பத்து தேர்ந்தெடுத்தாள்.

ஊரோடு ஒத்ததாய்,மனதேயில்லா மல் ஒற்றை மகளை விட்டனர் பெற் றோர். காலம் ஓடியது. எத்தனையோ



# பொழுது விடியாதா?

இடங்களில் மயிரிழையில் உயிர் பிழைத்து, இறுதியில் வீடு வந்து சேர்ந்தபோது காலன் அம்மாவை வாரிக்கொண்டு போயிருந்தான். பத்துவின் ஒரு கலியாணம் காட்சியைப் பார்த்துவிட்டு கண்ணை மூடுவதுதான் அப்பாவின் ஆசை. பத்துவுக்கு இதில் எந்த நாட்டமும் இல்லை என்று தெரிந்தபிறகு வற்புறுத்துவதை விட்டுவிட்டார்.

கடந்தகால நினைவுகளின் ரணம் ஆறப்போவதில்லை என்பதை கண்கூடாக பக்கத்திலிருந்து பார்த்ததன் பின் பத்துவுக்கு ஆதரவாக மாறிப்போனார் அவளது தந்தை. இப்போது பத்து ஒரு தனித்து இயங்கும் பத்திரிகை நிருபர், பகுதி நேர ரியூசன் வாத்தியார், வயோதிபர்களைப் பராமரிப்பவர் என்று பல வேலைகளுக்குச் சொந்தக்காரி.

'ஏதாவது செய்ய வேண்டும்' என்ற கனவு மட்டும்தான் பத்துவுக்கு. இதனால். இப்படியான எந்தக் குத்தல் பேச்சுகளையும் அவள் ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்வதில்லை. இத்தனை வருடங்களில் எத்தனை வகையான மனிதர்களைப் பார்க்கும் அனுபவத்தைக் கடந்துவந்திருக்கிறாள் அவள்?

கலட்டியின் ஒற்றையடிப் பாதையைக் கடந்து செம்மண்பாதையில் ஏறியபோது எதிரே பத்துப் பதினொரு வயது மதிக்கத்தக்க சிறுமி வருவது தெரிந்தது. கிட்ட வந்தால்...

''அட..!! தர்சா..!! என்னட்டைப் படிக்கிற பிள்ளை!'

தன்னைப் பார்த்ததும் தர்சி ஏனோ திடுக்கிட்டாற் போல் இருந்ததாகத் தோன்றியது பத்துவிற்கு. கையசைத்துக் கடந்து போனாலும் ஏதோவொரு உறுத்தல். என்னவாக இருக்கும்? உண்மையில், சிலநாட்களாகவே மனதின் அடிவாரத்தில் ஏதோவொன்று அரித்துக் கொண்டிருப்பதான ஒரு உணர்வு. எந்த வேலை செய்தாலும் அது விலகிய பாடில்லை. 'நமநம' வென்று எந்த நேரமும் ஏதோவொன்றை தான் சரியாகக் கவனிக்காத, தப்பாக இருப்பதான உணர்வு பத்துவை சங்கடப்பட வைத்துக் கொண்டிருந்தது. கண் பார்த்து மூளைக்குச் சொல்லியும் அதை மூளை சரியாகப் பதிவுபண்ணாத ஏதோ ஒன்று. இந்த உணர்வு ஆபத்தானது என்பதை கடந்த காலங்களில் பத்து பல தடவைகள் கண்ணாரக் கண்டிருக்கிறாள்.

மூச்சிரைக்க சைக்கிளை உதைத்தபடி பின்னேர ரியூசனுக்குப் போகும் வழியில், அந்த விடலைக் கூட்டம்.ஒருத்தனின் 'மொபைல்' இல் எல்லோரும் நெருக்கியடித்துநின்று எதையோ பார்த்துக் கொண்டிருந்தது. பத்துவைப் பார்த்ததும் பதட்டமாகினர். இவர்கள் வேறு யாருமல்லர். சில உயர்தர வகுப்பு மாணவர்கள்தான். வசதியைத் தம்பட்டமடிக்க மோட்டார் சைக்கிள்கள் வாங்கிக் கொடுத்திருந்தனர் பெற்றவர்கள். ஊர் சுற்றுவதும், வயது வித்தியாசம் இல்லாமல் தெருவில் போகும் பெண்களுக்கு பகிடி விட்டு பல்லிளிப்பதுமாக காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை இப்படி அலையவிடும் இவர்கள் பெற்றவர்களைச் சொல்ல வேண்டும். இப்போது ரியூசனில் கற்பிக்கும் ஒரு இளம் ஆண் ஆசிரியருடன் கொஞ்சம் நெருக்கமாக இருக்கிறார்கள்.

''மொபைலில் என்ன பார்த்தார்கள்? ஏதும் பார்க்கக் கூடாத விசயமோ...? என்னைப் பார்த்து பதறிப் போகிறார்கள் என்றால் எங்களுக்குத் தெரிய வரக்கூடாத ஏதோவொன்றுதான்''.

மனம் ஒரு நிலையில்லாமல் தவித்தது.வகுப்பில் நன்றாகப் படிக்கும் காவியாவை இன்றும் காணவில்லை. இரண்டு மூன்று வகுப்புகளுக்கும் வரவில்லை. ''தெரியேல்லை மிஸ்...'' என்ற அவளது நண்பி ஏனோ பத்துவின் கண்களை நேரடியாகப் பார்ப்பதைத் தவிர்த்தாள். வகுப்பு முடிந்து எல்லோரும் போனபின், தானும் கதவைப் பூட்டிக்கொண்டு புறப்படத் தயாரானாள் பத்து. அப்போது காவியாவின் அப்பா வந்தார்.

''ரீச்சர்! ரியூசன் காசையும் குடுத்திட்டு பிள்ளையையும் கூட்டிப் போவம் எண்டு நினைச்சன். போட்டாவே...?

கொஞ்சக் காலமா ஸ்பெசல் வகுப்பு எண்டு பிந்தி வாறவா.... இண்டைக்கு இல்லையோ...?'' ஸ்பெசல் வகுப்பு ஒருநாளும் நடக்கவில்லை... பிள்ளை படிக்கவே வரவில்லை என்பதும் வீட்டிற்குத் தெரியவில்லை....

# பரங்கியாற்றின் வரலாறு



இலங்கையின் பெரிய ஆற்று வடிநிலங்களில் ஒன்றான பரங்கியாற்று வடிநிலத்தின் நீர் பயன்படுத்தப்படாமல் வீணாகக் கடலைச் சென்றடைகின்றது.

இதனைத் திசை திருப்பி, பொருத்தமான இடத்தில் இந்த நீர்வளத்தினை தேக்கி, அதனை எதிகாலத்தில் உருவாக்கப்படவுள்ள மாங்குளம் பெருநகர உருவாக்கத்திற்கான நீராதாரமாக பயன்படுத்த வேண்டும் என்ற பாரிய திட்டமிட்டல் ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பட்டு நிறுவனம் ஆராய்ந்து வந்தது.

வட மாகாணத்தின் தலைநகரமாக மாங்குளம் நிர்மாணிக்கப்படும் போது குடியிருப்பு, வர்த்தக நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள், கைத் தொழில் நிறுவனங்கள் போன்ற இன்னோரன்ன தேவைகளுக்கான பாரிய நீராதாரத்தை எப்படிப் பெற்றுக் கொள்வது என்ற கேள்வி 90 களில் எம் திட்டமிடலின் போது மிகப் பெரிய சவாலாக முன்வைக்கப்பட்டது.

இவ்வாறான சவால்கள்தான் சாதனைகளைப் படைத்ததென்பது உலக வரலாறு.

பொதுவாக மனித நாகரிக வளர்ச்சிக்கான நகர உருவாக்கங்கள் நீர்நிலைகளை அண்டியே பிறப்பெடுத்தது. நீராதாரத்தை உத்தரவாதப்படுத்தாமல்



# பொழுது விடியாதா?

மனம் பதைபதைத்தது. ஒரே மூச்சாக சைக்கிளை மிதித்து, வழியிலேயே காவியாவின் நண்பியைப் பிடித்து ஓரங்கட்டினாள் பத்து. வீம்பாக எதையுமே சொல்ல மறுத்தாள் அவள். அதட்டி, மிரட்டி, கெஞ்சி என்று பலவழிகளில் கேட்டும் பிடிவாதமாக இருந்தாள் அவள். ஆனால், ஏதோ ஒன்றை மறைக்கிறாள் என்பது தெரிந்தது. இறுதியில், 'காவியாவிற்கு ஏதாவது நடந்தால் உன்னைத்தான் பிடிப்பார்கள்' என்று பயங்காட்டினாள்.இறுதியில், தன் காதுகளையே நம்ப முடியவில்லை பத்துவால். கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது.

''கொஞ்சப் பேர் சேர்ந்து அவவைக் கெடுத்துப் போட்டாங்கள் ரீச்சர்!!'' வீடியோ எடுத்து வைச்சு இன்னும் அவளை வெருட்டிக் கொண்டு இருக்கிறாங்கள்.'' மெல்ல உடைந்து அழ ஆரம்பித்தாள் அவள். வீடியோ என்றதும் அந்தப் வழியில் பையன்கள் மொபைலைப் பார்த்த விதம் சட்டென ஞாபகத்திற்கு வந்தது.

''கனக்கப் பிள்ளையளை பள்ளிக்கூடத்தில, ரியூசனில எண்டு இப்பிடி வெருட்டி கெட்ட வேலை செய்யிறாங்கள்சின்னப் பிள்ளையளையும் தான்.. ஆருக்காவது சொன்னால் 'வட்ஸ்அப்' பில போடுவம், பிறகு குடும்பமா சாகுங்கோ என்னுறாங்கள். பயமா இருக்கு ரீச்சர்... என்ரை வீடியோவும் இருக்கு...'' குமுறி அழுதாள்.

''கனக்கப் பேரோ...? ஆரார்.? பயப்படாதையும். உம்மட பேர் வராது ஆர் இதைச் செய்யிற நாயள்? பயப்படாம சொல்லும்...'' படபடப்புடன் வினவினாள் பத்து.

அந்த ஆசிரியரும், அதே காலிக் கும்பலும்தான் இதற்குக் காரணமானவர்கள் என்ற உண்மை வெளிவந்தது. தோண்டத்தோண்டப் பூதம். அந்த வக்கிரம் பிடித்தவர்கள் என்னென்னவெல்லாம் செய்திருக்கிறார்கள்? கேட்கக் கேட்க தலை சுற்றியது.

''ஐயோ.!! எத்தனை ஆயிரம் பேர் என்னென்ன கனவுடன் கட்டியெழுப்பிய பூமி. இன்று ஓநாய்களின் கூடாரமாகி சின்னாபின்னமாகிக் கிடக்கிறதே....''

தர்சியின் கண்களிலிருந்த தவிப்பு இப்போது புரிந்தது. குற்ற உணர்வாக இருந்தது. இதையெல்லாம் முன்பே சற்றுக் கவனித்து இந்தப் பிள்ளைகளை பிரச்சனைப்படாமல் காத்திருக்கலாமோ...?

'இந்தக் குழந்தைகளுக்கு உதவி வேண்டும். ஆதரவு வேண்டும்.தவறு செய்பவர்களை எதிர்த்து நிற்கும் துணிச்சலை பெண் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். பெற்றவர்கள் பிள்ளைகளின் சிறு அசைவிலுமுள்ள மாறுதலை விளங்கிக் கொள்ள வேண்டும்.' எப்படி யோசித்தாலும் இவர்களுக்குத் தகுந்த தண்டனை கிடைக்க என்ன செய்வது என்று புலப்படவில்லை. முன்பானால்...? நிலைமையே வேறு. இப்படி ஒன்று நடந்திருக்குமா... ? இப்போ, காவற்துறையில் காசைக்காட்டி தப்பி விடுவார்கள். கொஞ்சநாளில் இவர்களின் அயோக்கியத்தனம் மறக்கடிக்கப்பட்டு விடும். இந்தப் பெண் பிள்ளைகளின் கதி...? பிரச்சனை அம்பலமான உடனே ஊர் ஆட்டம் கண்டுவிட்டது. அதிர்ச்சியும் ஆத்திரமுமாக எல்லோரும் குதிகுதியென்று குதித்தார்கள். ஆனால்... பின்னர்...?? காவற்துறை அவர்களைக் கைது செய்ததுடன் ஏதோ எல்லாமே சரியாகி விட்டது அல்லது சரிப்படுத்தப்படும்என்றதொரு உணர்வுடன்ஓரிரு கிழமைகளில் எல்லோரும் அமைதியாகி விட்டனர். இதைப் பற்றிய பேச்சே இல்லை.

இப்போதெல்லாம் பத்துவால் நிம்மதியாக இருக்க முடிவதில்லை. கண்ணுக்குத் தெரியாத ஆபத்துக்களால் சூழப்பட்டிருக்கும்பெண் குழந்தைகள், பெண்கள் பற்றிய சிந்தனைகளால் அலைப்புற்றாள் பத்து. இரகசியமாக பாலியல் துன்புறுத்தல் செய்பவர்கள் அநேகமாக குடும்ப உறுப்பினர், உறவினர், தெரிந்தவர்களாகத்தான் இருக்கும் என்கிறது உளவியல் மருத்துவம். பெண்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

அப்போதுதான் பெண்குழந்தைகளை அவர்களால் சரியாக வழிநடத்த முடியும், ஆண் குழந்தைகளை பெண்களை மதிக்க சொல்லிக் கொடுத்து வளர்க்க முடியும். ஊர் ஊராக தொடர்ச்சியாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஒன்று இருக்கிறது. முதலில் பெண்கள் இதன் அவசியத்தை புரிந்து கொள்ள வேண்டும். கோவிட் பற்றி சொன்னதும் மக்கள் புரிந்து கொள்ளவில்லையா..?

எண்ண ஓட்டங்களினால் அலைப்புற்று புரண்டு புரண்டு படுத்தாள் பத்து. நித்திரை வர மறுத்தது. விடியலுக்கு தொலைதூரம் இருப்பதாகவும் நாங்கள் வெறுமனே பார்வையாளராக இருப்பதாகவும் பட்டது. மீண்டும் ஒரு நெடிய இரவு.



போனால் எம் கனவு நகரம் வெறும் ஏட்டுச் சுரைக்காய் போல மாறி விடும் என்ற தவிப்புடன் நாம் பல நிபுணர்கள், பிரதேச அறிவு கொண்ட மூதாளர்கள், கிராமத்து தலைவர்களுடன் பல்வேறு ஆய்வுகளை செய்து காட்டுப் பிரதேசங்களினூடாடாக நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள், நிபுணர்களை கொண்ட நேரடி கள ஆய்வு பயணங்களை மேற்கொண்டு செய்த மாதக் கணக்கான அயராத உழைப்பு, இறுதியில் வெளிச்சத்தை காட்டியது.

எதிர்காலத்தில் உருவாக்கப்படப் போகும் மாகாண தலைநகரம் ஒட்டுமொத்த வட பிராந்தியத்தின் அபிவிருத்தியினை உந்தி தள்ளிச் செல்லும் ஒரு பொறிமுறையாகவும் தமிழர் குடிப் பரம்பலை நவீனபடுத்தும் ஒரு மூலோபாய உத்தியாகவும் அமையும்.

இதே போன்று நிபுணர்களால் ஆய்ந்து பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட கிழக்கு மாகாணத் தலைநகரமாக மட்டக்களப்பின் அண்மையிலுள்ள கரடியனாறு அல்லது அதனை அண்டிய பகுதிக்கான வளர்ச்சித் திட்டங்களும் மேலும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். இதற்கு பல்துறைசார் அறிஞர்களை அணுகி வருகின்றோம். ஆர்வமும் தாயகப் பற்றும் உள்ள அனைவரையும் வரவேற்கிறோம். இவ் உன்னதமான பணிக்கு அர்ப்பணிப்புடன் இணைந்து வேலை செய்ய விரும்பும் அனைவர்க்கும்அழைப்பு விடுகின்றோம்.

எதிர்காலத்திற்கான இவ்வாறான பாரிய திட்டங்களை எம்மால் உருவாக்க முடியுமானால் உலகின் மூலைமுடுக்கெல்லாம் பரந்து விஞ்ஞான தொழிநுட்ப துறைகளில் வெற்றிகரமான பல சாதனைகளை செய்து கொண்டிருக்கும் எம் குடிமக்கள் நினைத்தால் எதுவும் சாத்தியமே.

**( ஆதாரம்: தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், 1992 )**



அங்கம்: 03

# வங்கம் தந்த பாடம்


எமது போராட்ட நடைமுறைகளிலிருந்த குறைபாடுகளை தெளிவாகச் சுட்டிக் காட்டலாம். நாங்கள் போரை நடாத்தினோம். மக்கள் போரை நடாத்தினார்கள். ஆனால் எங்களிடம் ஒரு சரியான அரசியல் தலைமை இருக்கவில்லை. சரியான அரசியற் தலைமை இல்லாத எந்தவொரு கெரில்லாப் போராட்டமும் வளர்ச்சியடையாது.'அவாமி லீக்' எமது விடுதலைப் போராட்டத்திற்கான ஒரு சரியான அரசியற் தலைமையைத் தரவில்லை என்பதே உண்மை.

எங்களுடைய இராணுவத் தலைமையானது கெரில்லாப் போராட்டம் பற்றிய ஒரு சரியான கொள்கையைக் கொண்டிருக்கவில்லை. பழமைவாத ( conventional ) அதிகாரிகளான கேர்ணல் ஒஸ்மானி, மேஜர் சியா, மேஜர் காலித், மேஜர் சவியுல்லா போன்றவர்கள் போராட்டத்திற்குத் தேவையான அமைப்பு பற்றிய எந்தவித விளக்கமும் அற்றவர்கள். அதையும் தாண்டி, எங்கள் கெரில்லாப் போராட்டம் சாதாரண வளர்ச்சிகூட அடைய முடியாதவாறு, பழமைவாதக் கருத்துக்களில் ஊறிப் போயிருந்த இவர்கள் ஒரு பெரிய தடையாக இருந்தார்கள்.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் இராணுவத் தலைமை மட்டும் போதுமற்றது. சரியாகப் பயிற்சிபெற்ற போர் வீரர்களும், அதிகாரிகளும் இராணுவப் பிரிவுகளுக்குச் சேர்க்கப் பட்டிருந்தனர். ஆயினும், தனிப்பட்ட சுயாதீன விடுதலைப் போர்வீரர் குழுக்களுக்கு அவர்களை சரியாக வழிநடத்தும் தலைமைகளும், அவர்களுக்கான சரியான பயிற்சிகளும் கிடைக்கவில்லை. மேலும், விடுதலைப் படைகளின் தளபதிகளுக்கு விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு தெளிவான கருத்தோ பார்வையோ இருக்கவில்லை. தமது அதிகாரத்தை நிலைநாட்டத் தேவையான இராணுவப் பிரிவுகளை உருவாக்குவதே இந்தத் தளபதிகளின் ஒரே நோக்கமாக இருந்தது.

இருபது இராணுவப் பிரிவுகளைக் கொண்ட ஒரு இராணுவம் விரைவில் உருவாக்கப்படும் என்று இந்தத் தளபதிகள் உறுதி கூறினார்கள். அதேசமயத்தில், தேசிய மக்கள் போராட்டத்தின் சாதாரண வளர்ச்சி தடைப்பட்டது.

# வங்கம் தந்த பாடம்



விடுதலை வீரர்கள் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத தீரமிக செயல்களை நாட்டினுள் நிகழ்த்தினர். ஆயினும், அவர்களுக்கு உற்சாகமூட்ட எவரும் இருக்கவில்லை. இந்திய வெளித்தலையீடு இல்லாவிடின், சரியான தூரநோக்குக் கொண்ட தலைமை நாட்டினுள் தொடர்ச்சியாக உருவாகியிருக்கும். அகர்தலாவில், இந்திய மேஜர் காலித் முஸ்ரப் தலைமையில் இருந்த இராணுவப் பிரிவு சரியான முறையில் கையாளப் பட்டிருந்தால், விவசாய வீரர்களைக் கொண்ட 20 பிரிவுகளை நாம் ஏழு அல்லது எட்டு மாதங்களினுள் உருவாக்கியிருக்கலாம்.

எனது கருத்துகள் கேர்ணல் ஒஸ்மானிக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. அவருடைய வாழ்க்கையோ மிகவும் இலகுவானதாக இருந்தது. படுத்துறங்குவதற்குப் பாதுகாப்பான இடமும், பிரிவுகளின் தலைமைப்பீடங்களைப் பார்வையிடுவதற்குப் போதுமான நேரமும் அவருக்கு இருந்தது. இது ஒரு விடுதலைப் போராட்டத்தின் நேரெதிர்த் தன்மையாகும். இத்தகைய தலைமையானது ஒரு முழுப் பைத்தியக்காரத் தலைமையாகும். மக்கள் போராட்டத்திற்கும் சாதாரண போராட்டத்திற்கும் பெரும் வேறுபாடு உண்டு. இது கேர்ணல் ஒஸ்மானிக்கு விளங்கவில்லை. கெரில்லாப் போராட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் இராணுவப் பிரிவுகளை உருவாக்குவது தவறானதாகும். சரியான நேரத்தில் கெரில்லாப் பிரிவுகள் இராணுவப் பிரிவுகளாக ஆக்கப்படவேண்டும். 11ம் பிரிவின் முக்கியத்துவம் காரணமாக, நான் அந்தப் பிரிவில் நிற்கத் தீர்மானித்தேன். வெவ்வேறு பிரிவுகளுக்கு விஜயம் செய்து நேரத்தை வீணாக்குவது முட்டாள்தனமானதாகும். அரைகுறை மனதுடன் ஒஸ்மானி என்னைப் பிரிவுத் தளபதியாக நியமித்தார்.

பிரபல விடுதலை வீரர்களான மேஜர் அப்சார், காலில், பட்டேம், மர்வாட் முதலானோரின் தலைமையில், பங்களாதேஷின் உள்ளே தொடர்ச்சியாக உருவான படைகள்தான் எமது விடுதலைப் போராட்டத்தில் போராடிய சக்திகள். இதுவே உண்மையான இயற்கையான வளர்ச்சி. ஆனால், கேர்ணல் ஒஸ்மானியின் தலைமையில் இருந்த இராணுவத் தலைமையும், இடைக்கால அரசும் இந்த இயற்கையான வளர்ச்சியை சந்தேகக் கண்ணுடன் பார்த்தனர். இதனால், வளர்ச்சியடைந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் இராணுவப் படையணிக்கும் இடையில் சரியான தொடர்புகள் எவையும் இருக்கவில்லை.

இந்திய இராணுவ வீரர்களின் தகாத செல்வாக்கும், சில வீரர்களுக்கிடையில் இருந்த சித்தாந்தத் தெளிவின்மையும், சில வீரர்களிடையே இருந்த சுயநலம் மேலோங்கிய தன்மையும் பல தகாத நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடக் காரணமாயின. இப்படியான வீரர்கள் பல சந்தர்ப்பங்களில் களவிலும், வீடு உடைப்பதிலும் ஈடுபட்டனர்.

இடைக்கால அரசாங்கமானது பங்களாதேஷிற்குள்ளிருந்த விடுதலை செய்யப்பட்ட பிரதேசத்தினுள் தன்னை அமைத்திருக்க வேண்டும். பிரிவுத் தலைமைகளும், எல்லா அதிகாரிகளும் இந்தியாவை விட்டு வெளியேறி பங்களாதேஷினுள் தமது நிலைகளை அமைத்திருக்க வேண்டும். இதுதான் இப்பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வாக அமைந்திருக்கும். நான் இக்கருத்தை வெளியிட்டவுடன் மேஜர் சியா இதை அங்கீகரித்தார்.



சகல தலைமைகளும் எல்லைக்குள் அமைக்கப்பட வேண்டும் என நாம் தீர்மானித்தோம். ஒரு குறித்த நேரத்தில் எல்லாத் தலைமைகளும் பங்களாதேஷினுள் செல்ல வேண்டுமெனத் தீர்மானித்தோம் நாம். சகல பிரிவுத் தளபதிகளினதும் கூட்டம் கூட்டப்பட்டது. கேர்ணல் ஒஸ்மானியும், மேஜர் காலித், மேஜர் சவிபுல்லா ஆகியோரும் இதனை எதிர்த்தார்கள். இதனால், தலைமைகள் இந்தியாவிலிருந்து பங்களாதேஷினுள் செல்வது தடைப்பட்டது மட்டுமல்லாமல், மேஜர் சியாவின் படைப்பிரிவையும் எனது பகுதியிலிருந்து எடுத்து விட்டார்கள்.

நான் ஒரு விமானப்படை அதிகாரியான ஃபிளைட் லெப்டினன்ட் காமித்துல்லாவுடனும் மற்றுமொரு காயமடைந்த அதிகாரியான உப லெப்டினன்ட் மன்னன் ஆகியோருடனும் விடப்பட்டேன். போக்குவரத்துக்கென ஒரேயொரு ஜீப் வண்டி மட்டுமே தரப்பட்டது. எம்மிடம் போதுமான உபகரணங்கள் இல்லாததைப் பயன்படுத்தி, இந்திய இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் சிங் எங்கள் பிரிவைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர நினைத்தார். எமது பிரிவின் தலைமை முகாமை, இந்திய எல்லையில் இருந்து 40 மைல் தொலைவில் தூராக் (Thurag) என்னுமிடத்தில் அமைந்திருந்த தனது தலைமை முகாமுடன் இணைக்குமாறு கருத்துத் தெரிவித்தார். பெரும்பாலான இந்தியப்பிரிவுத் தளபதிகளின் முகாம்களின் கூடாரங்கள்'கார்ப்பெட்' (Carpet) தரை விரிப்புகளுடன் இருந்தன.

நான் பிரிகேடியர் சிங்கின் யோசனையை நிராகரித்தேன். எனது பிரிவின் தலைமை முகாமை, கமால்பூர் துறைக்கு முன்பு பங்களாதேஷுக்குள் 800 யார் தொலைவில் அமைத்தேன். எனக்கு இறுதி வெற்றியைத் தருவதற்கு கமால்பூர், ஜமால்பூர், டாங்கில், டாக்கா முனைகளே முக்கியமானவை.

இக்கட்டத்தில் நான் ஒரு விடுதலை வீரரான சுபேதார் அப்தாப்பை ஞாபகப் படுத்த வேண்டும். அவர் வியக்கத்தக்க துணிவுமிக்க ஒரு வீரர். அவர் எப்போதும் பங்களாதேஷ் மண்ணைவிட்டு வெளியேறவில்லை. பாக்கிஸ்தான் இராணுவத்துடன் போராடச் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் அவர் வீரத்துடனும் தீரத்துடனும் போராடியதை எத்தனையோ இளைஞர்கள் நேரடியாகப் பார்த்திருக்கிறார்கள். ஆனால், நான் 11ம் பிரிவைச் சென்றடைந்தபோது அவர் ஒரு கலகக்காரர் எனக் கூறப்படுவதைக் கேட்டிருக்கிறேன். அவர் யாரின் கட்டளைக்கும் கீழ்ப்படிவதில்லை. குமிரிதானாவில் கோடால்காண்டியில் தங்கியிருந்தார் அவர். மேஜர் சியாவும் இந்தியப் படைத்தளபதி பிரிகேடியர் சிங்கும் பலமுறை கட்டளையிட்டும் அவர் அவர்களைச் சந்திக்கவில்லை. இவரைப் பற்றி மேலதிகமாக அறிவதற்கு நான் விரும்பினேன். அவரைச் சந்திக்க விரும்பி, நான் 18 மைல் தூரம் நடந்து கோடல்காண்டியைச் சென்றடைந்தேன். இது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் பங்களாதேஷினுள் எந்தவொரு அதிகாரியையும் ஒருபொழுதும் எதிர்பார்க்கவில்லை. போர் நிலவரம் பற்றிய கருத்துக்களை நாங்கள் பரிமாறிக்



# வங்கம் தந்த பாடம்

கொண்டோம். அப்போதுதான் நாங்கள் ஒத்த கருத்துள்ளவர்களாக இருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டோம். அன்றுமுதல் நாங்கள் நல்ல தோழர்களாகப் போராடினோம்.

சுபேதார் அவ்தாப், தன்னால்தான் ருமாரி தானாவின் பெரும்பகுதி விடுதலையாக இருந்தது எனக் கூறினார். 16ம் திகதி மார்கழி மாதம்வரை நிலைமை அவ்வாறுதான் இருந்தது. அவர் இந்தியாவிற்குச் சென்று தளம் அமைப்பதை எப்போதும் நிராகரித்தார். நான் இரவு பூராவும் அவருடன் உரையாடினேன். அவர் ஒரு இயற்கையான தலைவனாகவும் அவருக்கு முன்னால் நான் ஒரு சிறு மனிதனாகவும் உணர்ந்தேன். அவர்தான் எதையும் செய்யத் தயாராக இருப்பதாகக் கூறினார். அவருடைய நிலைக்கு முன்னால் ஒரு தீவில் நிலை கொண்டிருந்த பாக்கிஸ்தானிய இராணுவ முகாமைத் தாக்குமாறு நான் அவருக்குச் சொன்னேன். இந்த இரு நிலைகளுக்கும் இடையில் ஒரு ஆறு இருந்தது. பாக்கிஸ்தானியர் நிலைகொண்டிருந்த தீவு ஒரு சிறு கால்வாயினால் இரண்டாகப் பிரிக்கப் பட்டிருந்தது. சுபேதார் அவ்தாபும் நானும் படகின் மூலம் ஆற்றைக் கடந்தபொழுது, கால்வாயின் அப்பால் உள்ள பகுதியில் பாக்கிஸ்தானியர்கள் இருப்பதை அவதானித்தோம். அண்மையான பகுதி உயர்ந்த புல்லினால் நிரப்பப் பட்டிருந்தது. இரவோடிரவாக ஆற்றைக் கடந்து இந்தப் புல்லினுள் மறைந்திருக்குமாறு நான் ஒரு விடுதலை வீரர் குழுவை அனுப்பினேன். அதிகாலையில் வேறொரு குழு சென்று பாக்கிஸ்தானியர் தம்மைத் துரத்தி வரும்படி தூண்டும் நடவடிக்கையில் இறங்குமாறு பணித்தேன். நான்கு நாட்களின் பின்னர் அவ்தாப் தனது திட்டத்துடன் தயாராகவிருந்தார்.

எதிர்பார்த்ததுபோல, பாக்கிஸ்தானியர் அதிகாலை சென்ற குழுவைத் தாக்கினர். அவர்களின் பிரிவுகள் விடுதலை வீரர்களின் பகுதிக்கு இழுக்கப் பட்டன. முதலாவது தாக்குதலில், பாக்கிஸ்தானியர்களுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. அவர்கள் இரண்டாவது, மூன்றாவது தாக்குதல்களை மேற்கொண்டாலும் ஒவ்வொரு தாக்குதலும் முறியடிக்கப் பட்டது. அவர்கள் பயத்துடன் தங்கள் நிலையை விட்டு வெளியேறிவிட்டனர். யக்காதுயரப் வரை ருமாரிதானாவின் முழுப்பகுதியும் எமது கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.



அடுத்ததாக, எமது கவனத்தை சில்மாரிக்குத் திருப்பினோம். இச்சண்டை பிரபல்யமானது மட்டுமல்லாமல் எனது தலைமையில் நடைபெற்றதுமாகும். புரட்டாசி மாதத்தின் நடுப்பகுதியில் ஒரு நாள் இரவு, 2000 விடுதலை வீரர்கள் பிரம்மபுத்ரா நதியைக் கடந்தனர். நாம் தாக்கவிருந்த இலக்கு பெருந்தொகையான பாக்கிஸ்தானியர்களாலும் கூலிப்படை ரசாக்கர்களாலும் காவல் காக்கப்பட்டிருந்தது. தாக்குதலின் பின் நாங்கள் சில்மாரியை 24 மணித்தியாலங்களுக்கு எங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தோம். பெருந்தொகையான ஆயுதங்களையும் கைதிகளையும் கைப்பற்றித் திரும்பினோம். இது போர்முனைகளின் சரித்திரத்தில் ஒரு விசேட சம்பவமாகும்.

புரட்டாதி மாதம் தொடக்கம் விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய பெருமளவிலான செய்திகள் எமது பகுதியிலிருந்து வானொலி மூலமே ஒலிபரப்பப்பட்டது. அமெரிக்கச் செய்தி நிருபரான ஜாக் அன்டர்சன் கூட, எமது பகுதியில் செய்யப்பட்ட சாதனைகளைக் குறித்துக் கொண்டார். அவர் ‘கமால்பூரின் வீழ்ச்சியுடன் பாக்கிஸ்தானியர் போரை இழந்து விட்டனர்’ எனக் கூறினார். கமால்பூர் தாக்குதலைத் தலைமை தாங்கும் போதுதான் நான் என் காலை இழந்தேன். எனது பிரிவுகள்தான் முதன்முதலில் டாக்காவை அடைந்தன.

விடுதலைப் போரைப்பற்றிப் பேசும்பொழுது, எமது விடுதலை வீரர்களின் தேசப்பற்று, தீரம், கீழ்ப்படியும் தன்மை பற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டும். நாடு தனது சிறந்த மக்களை அவர்களிடமே கண்டது. இக்கட்டத்தில், எமக்கு உணவு, இருப்பிடம், எதிரி பற்றிய தகவல்கள் என்பனவற்றைத் தந்து எம்மை உற்சாகப்படுத்திய வறிய கிராம மக்களைப்பற்றி நான் கூற வேண்டும். எம்மிடம் ஆயுதம் இருந்தது. அவர்களிடம் ஒன்றுமே இருக்கவில்லை. எமக்கு உதவி செய்தபடியால் அவர்கள் பாக்கிஸ்தானியரின் குண்டுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அவர்களது வீடுகள் எரிக்கப்பட்டன. பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர். அவர்களுக்கு நான் எப்போதும் எனது நன்றியைத்தான் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது.

தொடரும்...

## சிங்கள இசை நிகழ்ச்சியில்

# முதல் முறையாக தமிழ் சிறுமி பிரமாண்ட சாதனை

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக சிங்கள தொலைக்காட்சி ஒளிபரப்பாகும் ரியாலிட்டி இசை நிகழ்ச்சி போட்டியில், மலையக மண்ணின் தமிழ் சிறுமி ஒருவர் முதலிடத்தை பெற்று, வரலாற்று சாதனை நிகழ்த்தியுள்ளார்.

பதுளை மாவட்டம், பண்டாரவளை நகரில் வசிக்கும் 13 வயதான தியாகராஜா பிரனிர்ஷா என்ற சிறுமியே இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

இலங்கையில் பிரபல தனியார் சிங்கள தொலைக்காட்சியான சிரச தொலைக்காட்சியில் நடத்தப்பட்ட 'வாய்ஸ் டீன்' இசை நிகழ்ச்சி போட்டியில் கலந்து கொண்டே இவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

சுமார் 6 மாத காலமாக நடைபெற்ற இந்த போட்டியில், நூற்றுக்கணக்கான சிங்கள சிறுவர்கள் கலந்து கொண்டதுடன் இந்த போட்டியில் கலந்து கொண்ட ஒரே தமிழ் சிறுமி பிரனிர்ஷா.

இந்த போட்டிக்கு முதல் முதலில் செல்லும் போது, அவர் வெற்றி பெற முடியும் என்று நான் நினைக்கவில்லை என்றும், நிகழ்ச்சியில் பங்குபெற வேண்டும் என்ற ஆசை மட்டும் தனக்கு இருந்தது என்றும் ஊடகங்களுக்கு கூறியிருந்தார்.

இதுவொரு சிங்கள தொலைக்





காட்சி என்பதால் வெற்றி பெற்றதன் பின்னர் மேடையில் இருக்கும் போதே, தான் அதிர்ச்சி அடைந்ததாகவும், சிங்கள மக்கள் தனக்கு வாக்களிப்பார்கள் என்று நினைக்கவில்லை என்றும் கூறியிருந்தார்.

எனினும், நிறைய சிங்கள மக்கள் வாக்களித்திருந்தார்கள். சிங்கள மக்கள் தமிழ் மக்கள் இரண்டு பேரும் இணைந்து தான் தனக்கு வாக்களித்திருந்தமை மிகவும் மகிழ்ச்சியை தந்தது என்றும் அவர் கூறினார்.

இதுவொரு சர்வதேச போட்டி. இதில் அனைத்து மொழிகளிலும் பாட முடியும். பண்டாரவளை நகரிற்கும் ஆடிசனுக்கு வருகின்றார்கள் என கேள்விபட்டேன். சர்வதேச போட்டியொன்றில் பங்கு பெற வேண்டும் என்ற கனவு எனக்கு இருந்ததாகவும். அதுக்காகவே தான் போட்டியில் கலந்துக்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

பிரனிர்ஷா மூன்றாவது சுற்றில் பாடிய பாடலே திருப்பு முனையாக இருந்தது மூன்றாவது சுற்றில் 'மகே ரட்டட தலதா' என்ற பாடலுக்கு நிறைய பேர் கமண்ட் மற்றும் நல்ல வரவேற்பு கிடைத்தது.

இந்த போட்டிக்கு வந்ததன் பிறகு தான் பிரனிர்ஷா சிங்களம் பேச கற்றுக்கொண்டதாகவும் கூறினார்.

சிறுவர்களுக்கான மருத்துவராக வேண்டும் என்பதே லட்சியம் எனவும் இசையையும் தொடர வேண்டும் எனவும் பிரனிர்ஷா குறிப்பிட்டிருந்தார்.

'சிங்களவர்களும் தமிழ் மொழியை கற்றுக்கொள்ள வேண்டும்'.

பிரியா (நுவரெலியா, இலங்கை)



# மனதை தொட்ட கதை

பூட்டிய கிரில்லுக்கு அப்பால், ஒரு பெரியவர், கசங்கிய சாதாரண வேட்டி சட்டை, முகத்தில் கருப்பும், வெள்ளையுமாக மண்டிய ரோமக் காடு, நீண்ட பயணத்தால் களைத்த முகம் என, கையில் நகைக்கடை விளம்பரத்துடன் இருந்த ரெக்சின் பையுடன் நின்றிருந்தார்.

அவர் கையிலிருந்த சீட்டை பார்த்தார்.

‘‘ஆனந்த், நம்பர். 8, யோகானந்தம் நகர்?’’

‘‘ஆமாம்... இது தான். நான் தான் ஆனந்த்... நீங்க... என்ன வேணும்?’’

அவர் வறண்ட உதடுகளை, நாவால் ஈரப்படுத்திக் கொண்டார்.

‘‘நான் உங்கப்பாவோட நண்பன் காரைக்காலேருந்து வர்றேன். உங்கப்பா லெட்டர் கொடுத்து அனுப்பியிருக்கார்.’’

பெரியவர் ரெக்சின் பை ஜிப்பை திறந்து, ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார்.

வாங்கிப் பார்த்த ஆனந்த்,

‘‘அப்பாவா?’’ என்று வினவியபடி, கடிதத்தை படித்தான்.

அதில், ‘‘அன்புள்ள ஆனந்துக்கு, அப்பா எழுதுவது. ஆசிர்வாதம். கடிதம் கொண்டு வரும் ராமசாமி, என் நண்பன். ரொம்ப கஷ்ட ஜீவனம். இவரது ஒரே பிள்ளை, சமீபத்தில் விபத்தில் இறந்து விட்டான். விபத்துக்கான இழப்பீடு கிடைத்தால், ராமசாமியும், அவர் மனைவியும் வாழ, ஓரளவாவது உதவியாக இருக்கும்.

‘‘விபத்து சம்பந்தமான போலீஸ் விசாரணை, விபத்து ஏற்படுத்திய டிராவல்ஸ் வேன் உரிமையாளர் தர ஒப்புக் கொண்ட இழப்பீடு போன்ற சகல விவரங்களையும் சேகரித்து, அவரிடம் கொடுத்தனுப்பி இருக்கிறேன். சென்னையில், தலைமை அலுவலகத்தில் தருவார்களாம்... சென்னை அவருக்கு புதிது. நீ கொஞ்சம் அவருக்கு உதவி செய்தால் நல்லது; செய்வாய் என்று நம்புகிறேன். மற்றபடி உடம்பை பார்த்துக் கொள். பொங்கலுக்கு கண்டிப்பாக ஊருக்கு வர வேண்டும். உன் அப்பா பரமேஸ்வரன்...’’ என்று எழுதப்பட்டிருந்தது.

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார் ராமசாமி.

ஒரு வினாடி யோசித்தவன், சட்டென சாவி எடுத்து வந்து, கேட்டைத் திறந்தான்.

‘‘வாங்க சார்... உட்காருங்க...’’ என்றவன், டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். தயங்கியபடி உள்ளே வந்த ராமசாமி, தண்ணீரை வாங்கிப் பருகினார்.

‘‘சாப்பிட்டீங்களா?’’

‘‘இல்லே... வழியிலே இரண்டு வாழைப் பழம் சாப்பிட்டேன். பஸ் லேட்டு, காலையில காரைக்கால்லே கிளம்பினா, சாயங்காலம் மெட்ராஸ் போயிடலாம்னு உங்கப்பா சொன்னார். பஸ் பிரேக் டவுன் ஆயிடுச்சு... அதான்... அகாலத்திலே வந்து...’’

‘‘அதனாலே என்ன... பரவாயில்லை.’’

பிரிட்ஜை திறந்து பார்த்தான் ஆனந்த்.

தோசைமாவு இருந்தது. நான்கு தோசை சுட்டு, மிளகாய் பொடி, எண்ணெய், தண்ணீர் கொண்டு வந்து, டேபிள் மேல் வைத்தான்.

‘‘சாப்பிடுங்க... இதோ வர்றேன்,’’ என்றவன், வாசல் பக்கம் மொபைலுடன் போனான்.

திரும்பி வந்த போது, சாப்பிட்டு முடித்து, கை நிறைய பேப்பர்களுடன் காத்திருந்தார் ராமசாமி.

‘‘சொல்லுங்க... என்ன நடந்தது?’’ என்று, அவர் எதிரில் அமர்ந்து, பேப்பர்களை வாங்கிப் பார்த்தான்.

பையனின் போட்டோ இருந்தது. 22 வயதில், அழகாக, பதவிசாக இருந்தான் பையன். ஆனந்துக்கு கண்கள் கலங்கின.

முகத்தை துடைத்துக் கொண்டார் ராமசாமி.

‘‘இவனுக்கு முன்னாலே பிறந்த நாலஞ்சு பேரும், சின்ன வயசிலேயே போய் சேர்ந்துட்டாங்க... இவன் தான் தங்கினான். மகேஷ்ன்னு பேர்; கஷ்டப்பட்டு படிக்க வெச்சேன்... பொறுப்பான பிள்ளை. ஸ்காலர்ஷிப்லயே பி.இ., முடிச்சான். வேலை கிடைச்சுட்டா, நம்ம கஷ்டம் தீர்ந்துடும்ன்னு வாய்க்குவாய் சொல்வான்; வேலையும் கிடைச்சுது. என்னையும், என் மனைவியையும், நிற்க வச்சு நமஸ்காரம் செய்துட்டு, மெட்ராஸ் கிளம்பினான். பஸ் ஸ்டாண்ட் போக, ரோடு கிராஸ் செய்யறப்போ, வேகமா வந்த டிராவல் வேன் மோதி, ஸ்பாட்லேயே...’’ மேல் துண்டால் முகத்தை மூடி, குலுங்கினார் ராமசாமி பேசாமல் அவரையே பார்த்தான் ஆனந்த்.

அவராகவே தொடர்ந்தார்.

‘‘அந்த வேன் சொந்தக்காரர், நஷ்ட ஈடு தர ஒத்துக் கிட்டார். முதல்லே அதை வாங்கவே மனசு ஒத்துக்கல. பிள்ளையை பறி கொடுத்துட்டு,

அந்த பணத்திலே சாப்பிடறதான்னு வெறுப்பா இருந்தது. உங்கப்பா தான் எனக்கு ஆறுதல் சொல்லி, வாங்கிக்க



# மனதை தொட்ட கதை

சொல்லி வற்புறுத்தினார். எனக்கு நிரந்தரமா ஒரு வேலையும் கிடையாது. என் மனைவி ஏற்கனவே நோயாளி, பிள்ளை போன துக்கத்திலே, படுத்த படுக்கையாயிட்டா... எங்களை பகவான் அழைச்சுக்கற வரை, சாப்பிட்டுத் தொலைக்கணுமே... அதனாலே, கடைசியா நஷ்ட ஈடு வாங்கிக்க சம்மதிச்சேன். உங்கப்பா தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து, இங்கே அனுப்பி வெச்சார். என் பிள்ளை உங்களுக்கு உதவி செய்வான்னு

லெட்டர் கொடுத்தார்.''

''செய்யறேன்... கண்டிப்பா உதவி செய்றேன்,''என்று எழுந்தவன், அவர் படுக்க, பாயும் தலையணையும் கொடுத்தான்.

மறுநாள் காலை, காபி போட்டு அவருக்கு கொடுத்து, தானும் குடித்து, குளித்து விட்டு வந்தான்.

அவரும் குளித்து விட்டு வர, இருவருமாக பைக்கில் கிளம்பினர்.

''இங்கே நுங்கம்பாக்கம்ன்னு இருக்காமே... அங்கே தான் ஹெட் ஆபீஸ் இருக்காம்.''

''நுங்கம்பாக்கம் பக்கம் தான். நான் கூட வந்து செஞ்சு தர்றேன்,

வழியில் ஓட்டலில் டிபனை முடித்து, டிராவல் ஆபீஸ் வந்தனர்.

பார்மாலிடீஸ் எல்லாம் முடித்து, ''செக்'' கைக்கு வர மதியானம் ஆகிவிட்டது.

''ரொம்ப நன்றிப்பா... எனக்காக ரொம்ப சிரமப்பட்டுட்டே. நான் இப்படியே ஊருக்கு கிளம்பறேன். இப்ப பஸ் புடிச்சா, ராத்திரிக்குள்ளே காரைக்கால் போயிடலாம். என் மனைவி தனியா இருக்கா துணைக்கு ஆள் இல்லை...''

''நானே பஸ் ஏத்தி விடறேன் வாங்க,'' என்றவன், ஓட்டலுக்கு அழைத்துப் போய், அவர் மறுத்தும் கேளாமல், சாப்பிட வைத்து, தானும் சாப்பிட்டான். கோயம்பேடு வரை, பைக்கில் அழைத்துச் சென்று, காரைக்கால் பஸ்சில் ஏற்றி விட்டான். டிக்கட் வாங்க என்று ஐநூறு ரூபாயை, பிடிவாதமாக அவர் சட்டைப் பையில் திணித்தான்.

''ஒரு நிமிஷம்...' என்று போனவன், ஒரு பிளாஸ்டிக் பையுடன் வந்தான்.

''ஊர் போய் சேர எத்தனை நேரம் ஆகுமோ, வழியிலே சாப்பிட்டுக்குங்க...'' என்று, டிபன் பொட்டலம், தண்ணீர் பாட்டில் அடங்கிய பையை, அவரிடம் கொடுத்தான்.

அவர் நெகிழ்ந்தார்.

''என்னாலே உனக்கு ரொம்ப சிரமம்பா. லீவு வேறே போட்டுட்டு, எனக்காக அலைஞ்சிருக்கே... ஊருக்கு போனதும் முதல் வேலையா உங்கப்பாவைப் பார்த்து நன்றி சொல்லணும்.''

ராமசாமி உணர்ச்சி வசப்பட்டு பேசிக்கொண்டே போக, அமைதியாக அவர் பக்கத்தில் அமர்ந்தான், ஆனந்த்.

''ஒரு விஷயம் சார்... நீங்க தேடி வந்த ஆனந்த் நான் இல்லே...''ராமசாமி திடுக்கிட்டார்.

''என்னப்பா சொல்றே?''

''ஆமாம்... நீங்க அட்ரஸ் தப்பா வந்துட்டீங்க... நான் இருக்கிறது, யோகானந்தம் நகர் எக்ஸ்டன்ஷன். நீங்க, மெயின் யோகானந்தம் நகர் போயிருக்கணும். அது, கிட்டத்தட்ட, 2 கி.மீ., தொலைவில இருக்கு.''



ராமசாமிக்கு, ''குப்''பென வியர்த்தது.

''அடடா... தப்பு செய்துட்டேனே... ரொம்ப ரொம்ப சாரிப்பா. நீ, நான் வந்தவுடனேயே சொல்லியிருக்கலாமே... அனாவசியமா எதுக்கு எனக்காக மெனக்கட்டு...''

அவரைத் தடுத்தான் ஆனந்த்.

''நீங்க வந்தது ராத்திரி பத்தரை மணிக்கு... மெட்ராஸ்ல இருக்கிறவங்களுக்கே, இங்க அட்ரஸ் தேடி கண்டு பிடிக்கறது கஷ்டம் நீங்க மெட்ராசுக்கு புதுசு வேற. அதிலேயும், நீங்க வந்த காரியத்தை பத்தி தெரிஞ்சதுலே, எனக்கு மனசு சங்கடமா போயிட்டது...

''அதான் உங்களை சாப்பிட சொல்லிட்டு, லெட்டர்லே இருந்த நம்பருக்கு கால் போட்டு பேசினேன். நீங்க அட்ரஸ் மாறி வந்த விஷயம் கேட்டு, உங்க நண்பர், அதான் அந்த ஆனந்தோட அப்பா ,ரொம்பவே வருத்தப்பட்டார். அவர் கிட்டே, அவர் பிள்ளையோட நம்பர் கேட்டு வாங்கிப் பேசிட்டு... பொழுது விடிஞ்சதும், ஒரு ஆட்டோவிலே உங்களை அனுப்பி வைக்கலாம்ன்னு இருந்தேன்.

''ஆனா, மொபைல் போன்ல பேசினது ஆனந்தோட மனைவி. அவர் ஆபீஸ் விஷயமா டில்லி போயிருக்காராம். வர ஒரு வாரம் ஆகுமாம். அப்பதான் முடிவு செய்தேன். நேரடியா, நானே உங்களுக்கு உதவி செய்திடலாம்ன்னு... எந்த ஆனந்துன்னா என்ன சார்... நஷ்ட ஈடு உங்களுக்கு கிடைக்க, நான் உதவியா இருந்தேனேன்னு, நிம்மதி என் மனசிலே நிறைஞ்சு இருக்கு. அது போதும் சார்...''

டிரைவரும், கண்டக்டரும் பஸ்சில் ஏற, எழுந்தான் ஆனந்த்.

அவன் கைகளைப் பற்றி கண்ணில் ஒற்றிக் கொண்டார் ராமசாமி. அவன் உள்ளங்கை, ராமசாமியின் கண்ணீரால் நனைந்தது.

''நல்லா இருப்பா... நல்லா இரு... வேறென்ன சொல்றது?'' என்ற அந்த பெரியவர் கண்ணீர் மல்க கூறினார்.

இந்த வார்த்தைகள் ஆனந்த்திற்கு மிக்க திருப்தியை தந்தது. இந்த வார்த்தைகள் மனதிற்கு ஒரு புதிய தெம்பையும் உற்சாகத்தையும் கொடுத்தது.

பதினைந்து வருடங்களுக்கு முன் செத்துப் போன தன் அப்பாவை நினைத்துக் கொண்டான்.

''அப்பா... நீங்க இப்ப உயிரோடு இருந்து, இது மாதிரி லெட்டர் கொடுத்தனுப்பி இருந்தாலும், கண்டிப்பா உதவி செஞ்சிருப்பேன். என் வளர்ச்சியை பார்க்காமலே போயிட்டீங்களே... யாரோ ஒருத்தருக்கு பிள்ளையா இருந்து, அவர் நண்பருக்கு உதவி செய்திருக்கேன் அப்பா... உங்களுக்கு திருப்தி தானே?''

கனத்த மனதுடன், பஸ்சை விட்டு இறங்கினான் ஆனந்த்.

# Southern Brother!



We‘ve met for a long time
Before
On the first day of May of the year
Meet
‘In front of the new city council‘
We carry red flags
Leaders,
It says a lot of things we don‘t know.
We clapped and cheered.
Separating.
In these revolutionary dreams that do not lie
May is the month to fall asleep.
at that time….
see you again

Tamils ??from the North are coming by bus
Muslims from the East come by bus
Sinhalese in the south come by bus
All together
On the first day of May
The working class argued about war
About the revolution
Argued.
‘Society with Equal Rights‘
Talking about,

Get on the bus and go back
Imaginatively happy again.

This is customary.
the North….
Waiting for Mahavali to come
Went dirty.
Brother!  A long time ago
I did not see your face
Poetry d .. National Water
Although drunk,
Although one meeting on May Day,
Without
Is the labor relationship imaginary?
Come and see.
Our North and East
How dark it is
Called government forces
In the grip of demons
Dissolving Tamil lands
Floating in tears
Flowed like a flood
Maniacs.
We are in it
Was frightened.
Suffered
Scattered corpses
Our
Everywhere in the narrow lane
Bodies with broken intestines
With nipples bitten by a tooth
Young virgins who lost everything
I do not understand.
Does not fall on the ear
Write what this is
How to explain.
‘Red leaflets‘ from China
‘Lenin‘s Thoughts‘
Essays by ‘Marx‘
I do not have it now
The house caught fire,
At that moment she..they also caught fire
You have everything
Think.
I took it once today and read it
Stand on the road,
Beaten
Gossip on May Day,

# Southern Brother!

You get shot
The South is not just for you
I can not.
The national spring was stagnant
Above us
The coated dye dissolved
Brother!
When there is a new rise here
Land we own
Although willing to border
Ready to destroy us
Dominance
Without breaking the cage
Kulatunga tells stories
This is not for the rule of the ruling dynasty
Formerly for the Vesak holiday
I'm coming
Meet,
Home cooked food,
She is happy to give.
Mats for Tamils
Until going to sleep
Will be standing next to you
In the month of the year,
You are coming on New Year's Day
Come to our house
Wade, called Tose
Says things you love
Eat,
At six o'clock the palm tree in the lower palace
Enjoy soaking toddy
Inside
There were no divisions.
You call my wife sister
These are things that cannot be done today
Considered d. Do you understand why?
Think about it.
We called it the 'Red Dawn'
We eagerly awaited that feast.
For a revolutionary without division
We are together
Religion said the world passed
away without dawn
Somewhere .. Katulado ..
Anyway
An error occurred
Do you understand what happened here?
After losing everything
It is in a state of nothingness
As grass
As a small worm, that is
the moment of neglect
Conversation
Agreement Bargaining

Tell us
After cheating!
Our young people are writers
Our youth stand up today
Like us
I have not spoken since.
Colored flags were not hoisted
I did not see the party office work
the press,
Publishers are not looking


That small
Discarding youthful pleasures
Thrown away
that's all
What's wrong with this?
Saying no
I think the answer is correct
Side by side
The sleeping brother
Intent to kill
After the purpose

one Which bed is next?
Separation
An appropriate process is. what is wrong
Before Sinhalese people
Tamils As Muslims
Eelam without any division
in the underworld
Obtained
Creating a similar dharma earth
We were immersed in the imagination
Was it possible?
Kalubanda joins hands with Kandaiya
Sit down
Intended for drinking pulp
Arrived
What's the point then?
Theories are all right.
but....
It's practical
Disagreed, can not be added
This is the moment when it is not
completely dark yet!
If you can
A thousand like you
From road to road
From house to house
Stand in the shadow of justice.

Malligai
July 1986







# ஜூலை கலவரம் அன்று



தமிழர்களைக் கொன்று குவித்த ஜூலை அன்று...























# ஜூலை கலவரம் இன்று





தன்னவரையே தாக்கும் ஜூலை இன்று...



